# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 69 — 1973 ජූලි 20 වැනි සිකුරාද — 1973.07.20

69 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு யூலை மாதம் 20 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (II அ) — விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்கேற்றத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்— வெற்றிடம் | 699 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 711 |


## பதவிகள் — வெற்றிடம்

### இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு எற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள்**

1 : 1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். "இலங்கையர்" என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தில் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1 : 2 எதாவது ஒரு பதவிக்கான வேட்பாளர், அப்பதவிக்கு சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அல்லது அதனினும் உயர்வான பரீட்சையில் சித்தியடைந்திருப்பது ஆகக் குறைந்த கல்வித் தகைமையென விதிக்கப்பட்டிருக்குமிடத்து, சிங்கள மொழி மூலம் கல்வி பயின்ற சிங்களவராக இருப்பின் அவர் சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சிங்கள மொழியில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். (1961 ஜனவரி 1 க்கு முந்திய ஒரு திகதியிலிருந்து அரச சேவையில் இருப்போருக்கும் அரச சேவையில் உள்ள பிற பதவிகளுக்கு நியமனத்தை நாடும் அத்தகையோருக்கும் இத் தேவை ஏற்புடைத்தாகாது.)

1 : 3 விதிக்கப்பெற்ற சிங்கள வினைத்திறமைத்திறன் தேர்வினில் சித்தி எய்தத் தவறியமைக்காக தகுதிகூர்/சோதனைக்கான நியமனங்கள் நிறுத்தி வைக்கப்பட்ட "புதிதாகச் சேர்ந்த" அரச உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அப்படி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமாயின் 640 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிரூபத்தின் நியதிகளுக்கமைவாக விதிக்கப்பெற்ற உயர்ந்த சிங்கள வினைத்திறன் தேர்விலிருந்து விலக்களிக்கும் உரிமையை அவர்களுக்குக் கொடுக்கத்தக்க தகைமையை அவர்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

**2. படிகள்**

2 : 1 அரச சேவையில் உள்ள திருமணமான உத்தியோகத்தர்களுக்கு அவர்களது பதவிகளுக்கு ஏற்புடைய திரட்டிய மாத வேதனத்துடன் மேலதிகமாக தாபனக் கோவையின் vii ஆம் அத்தியாயத்தின் I ஆம் பிரிவில் தரப்பட்டபடி விவாகப் படியும் வழங்கப்படும்.

2 : 2 மாத வேதனம் பெறும் அரச உத்தியோகத்தர்கள், அவர்கள் 180 ரூபாவிலிருந்து 250 ரூபா வரையில் (சகல படிகளும் உட்பட) வேதனமாக/கூலியாகப் பெறும் தொகுதியினரைச் சேர்ந்தவராகின், அவர்களுக்கு விசேட படியாக ரூபா 7.50 கொடுக்கப்படும். அது தேவையானவிடத்து சரிசெய்யப்படுவதற்கு உள்ளாகும்.

---

**முக்கிய அறிவித்தல்**

இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I : தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆடு திசெம்பர் மீ 15 ந் உ.

---

**3. சேவை நிபந்தனைகள் : பொது**

**3 : 1** நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விடுக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

**3 : 2** அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

**3 : 3** அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**4. நிரந்தரப் பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடைத்தாகும் சேவை நிபந்தனைகள்**

**4 : 1** நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே **3** ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :—

**4 : 1 : 1** சகல நியமனங்களும், ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய, மூன்று வருடத்துக்குத் தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

**4 : 1 : 2** அரசாங்க சேவையில் " புதிதாகச் சேர்ந்த " அரச உத்தியோகத்தர்கள் யாவரும் அரசாங்கத்தின் அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கத்துக்காக **1956** ஆம் ஆண்டின் **33** ஆம் இலக்க அரசகரும மொழிச் செய் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் தற்போதுள்ள எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அல்லது அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கு பயன் ஏற்படும் வண்ணம் இனிமேல் புகுத்தக்கூடிய சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அமையுமாறு வேண்டப்படுவர்.

**4 : 1 : 3** சகல அரச உத்தியோகத்தர்களும், தமது தகுதிகாண் காலத்தின்போது அரசகரும மொழியில் வேலை செய்யும் அறிவைப் பெற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுவர்.

**4 : 1 : 4** தகுதிகாண் காலம் நிறைவு எய்திய பின்பு பதவியை உறுதி செய்வது, பிறவற்றுள் நியமனம் செய்யப்பட்ட தேதியிலிருந்து முதலாவது வருடத்தினுள் முதலாந்தர சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் இரண்டு வருடத்தினுள் இரண்டாந்தர சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடத்தினுள் மூன்றும் தரச் சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் தங்கியுள்ளது. ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம், விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது **4 : 1 : 5** ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும் அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

**4 : 1 : 5** தகுதிகாண் நிலைக்கால முடிவு வரையில் சிங்கள மொழியில் விதிக்கப்பெற்ற வினைத்திறனை அடையாவிட்டால் தாபனக் கோவையின் **II** ஆம் அத்தியாயத்தின் **12 : 13** ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரயோகமாகும்.

**4 : 1 : 6** சிங்கள மொழி மூலம் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள் மீது **4 : 1 : 3** ஆம் **4 : 1 : 4** ஆம் **4 : 1 : 5** ஆம் பிரிவுகள் பிரயோகிக்கப்படமாட்டா.

**4 : 1 : 7** அரச சேவையின், நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதி செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்கவேண்டியதில்லை.

**4 : 1 : 8** தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அறிவதற்கு அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவ பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**5. நியமன நியதிகள்**

**5 : 1** அரச சேவையில், நிரந்தரமான பதவிகளிலாயினும் மாதச் சம்பளமுள்ள தற்காலிக பதவிகளிலாயினும் **1.1.72** க்குப் பின்பு நியமனம் பெற்ற அரச உத்தியோகத்தர்கள் (நாட் சம்பளம் கொடுக்கப்படுபவர்கள் நீங்கலாக) யாவரும் தமது திரட்டிய வேதனத்தின் **6** சத வீதத்தை அரசாங்க சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்துதல் வேண்டும். அரசாங்கம் நிதியாண்டின் இறுதியில் கொடுக்கப்படும் திரட்டு வேதனத்தின் **9** சத வீதத்தைக் கொடுத்துதவும். அத்தகைய பதவியை வகிப்பவர் (அவர் விரும்பினால்) அவரது மாதத்திரட்டு வேதனத்திலிருந்து **6** சத வீதம் வரையில் அவரது விருப்பப்படி, சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்தலாம். ஆனால் அத்தகைய உதவு தொகை மீது அரசாங்கம் எந்தவித தொகையும் செலுத்தாது.

**5 : 2** **1971.12.31** க்கு முன்பு அரச சேவையில் ஓய்வூதியமுள்ள நிரந்தரமான பதவிகளை வகித்த அரச உத்தியோகத்தர்கள் **1972.1.1** க்குப் பின்பு அச்சேவையில் உள்ள நிரந்தரமான பதவிகளில் நியமிக்கப்பட்டால் அவர்கள் அவர்களது ஓய்வூதிய உரிமைகளை வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்படுவார். அத்தகைய அரச உத்தியோகத்தர்கள் முன்பு போல விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கு பணம் செலுத்துதல் வேண்டும்.

**6. யுத்த சேவைச் சலுகை**

**6 : 1** ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப் படைகளில் சேவையாற்றியவர்களும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர் பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள், அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காது

விடின், 1939 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையில் உள்ள அச் சேவைக் காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1946 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன், அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருந்திருத்தல் வேண்டும்.

**7. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்**

**7 : 1** எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

**7 : 2** வேட்பாளர்கள், குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

**7 : 3** ஒரு வேட்பாளரைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய வேட்பாளரைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

**7 : 4** விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப் பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவு செய்யப்பட்ட பின்பு அப் பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

**7 : 5** விளம்பரத் தேவைகளுக்கு அமைவுபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**8. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை**

**8 : 1** தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும்; அதில், பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

---

### கல்வி அமைச்சு

**இலங்கைப் பல்கலைக் கழகத்தில் 1974 ஆம் ஆண்டு ஒரு வருட உள்ளக பட்டப்பின் கல்வித் தகுதித் தேர்வுப் பயிற்சி நெறியும் இரு வருட அஞ்சல் மூல பட்டப்பின் கல்வித் தகுதித் தேர்வுப் பயிற்சி நெறியும்**

மேற்குறித்த பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரி 1973.06.22 அன்று வெளியிடப்பட்ட 65 ஆம் இலக்க இலங்கைக் குடியரசு வர்த்தமானியில் வெளியான அறிவித்தல் சார்பாக அறியத் தருவது :

2. மேற்குறித்த அறிவித்தலின் 4 ஆம் பந்தியின் ஈ (i) ஆம், ஈ (ii) ஆம், (ஊ) ஆம் உப பிரிவுகள் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளன :—

ஈ. (i) அரசினர் பாடசாலை அல்லது அரசினர் ஆசிரியர் கலாசாலை அல்லது அரசினர் தொழில்நுட்ப நிலையம் ஒன்றில் 1974.01.01 அன்று, பட்டதாரிகளுக்கான சம்பள விகிதத்தில் பட்டதாரி ஆசிரியராக 5 வருட கற்பித்தல் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்; அல்லது

ஈ. (ii) அரசினர் பாடசாலை அல்லது அரசினர் ஆசிரியர் கலாசாலை அல்லது அரசினர் தொழில்நுட்ப நிலையம் ஒன்றில் 1974.01.01 அன்று, பட்டதாரிகளுக்கான சம்பள விகிதத்தில் பட்டதாரி ஆசிரியராகக் குறைந்த பட்சம் 3 வருட கற்பித்தல் அனுபவம் உட்பட 10 வருட கற்பித்தல் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

ஊ. படிப்பு லீவிற்காக இதற்கு முன்னர் முறி ஒன்றினைச் செய்துள்ள ஆசிரியர்கள், அம் முறியின் கீழான கடப்பாடான சேவையில் குறைந்த பட்சம் 5 வருட சேவையை 1973.12.31 அளவில் பூர்த்தி செய்தால் மாத்திரமே ஒரு வருட உள்ளகப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராவர். தேவைப்படும் சேவையைப் பூர்த்தி செய்யாதவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3. அறிவித்தலின் 4 ஆம் பந்தியின் (ஈ) (i) ஆம், (ii) ஆம் உப-பிரிவுகளில் விதிக்கப்பட்டுள்ள தகைமைகள் இலங்கைக் கல்விச் சேவையிலுள்ள பட்டதாரி உத்தியோகத்தர்களுக்கு அமையமாட்டா.

4. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 1973 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4 ஆந் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

5. தெரிவுக்கான எழுத்துமூலப் பரீட்சை 1973 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15 ஆந் திகதி நடைபெறும்.

பிரேமதாச உடகம,
மகாவித்தியாதிபதி.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு-2,
1973 யூலை 4 ந் திகதி.

7-759—20.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 69

---

**இலங்கை கடற்படையில் கப்பற்றுறை புனைகையர் (சிவில்) பதவிகளுக்கான வெற்றிடங்கள்**

இலங்கை கடற்படையின் நிலையான படையில் கப்பற்றுறைப் புனைகையர் (சிவில்) பதவிக்கு, கட்டட நிர்மாண அனுபவமுடைய ஆட்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அபேட்சகர்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகளைத் திருப்திப்படுத்துபவர்களாகவும் தகைமைகளை உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. எல்லா விண்ணப்பகாரரும் கீழே கூறப்பட்டிருக்கும் எல்லா நிபந்தனைகளையும் கட்டாயம் பூர்த்தி செய்ய வேண்டும் :

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) (i) சிங்கள மொழி/அல்லது தமிழ் மொழி உட்பட ஆறு பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது, இலங்கை க.பொ.த. (சாதாரணதர)ப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன் பின்வருவனவற்றில் ஏதாவது இரண்டுக்குக் குறையாத பாடங்களில் திறமைச் சித்தி பெற்று இருத்தல் வேண்டும் :—

(i) தூய கணிதம் ;

(ii) பிரயோக கணிதம் ;

(iii) பௌதிகவியல் ;

(iv) இரசாயனவியல் ;

(v) உயர்தர கணிதம் ;

(vi) கேத்திர கணித/இயந்திர கணித வரைதல்

(இ) கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் தொழில்நுட்பத் தகைமைகளில் ஒன்றை உடையவராக இருத்தல் வேண்டும் :—

(i) இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி ஒன்றில் கனிட்ட தொழில் நுட்ப அலுவலர் (சிவில்) பயிற்சியை (அல்லது இதற்குச் சமமான தகைமைகளைப் பெற்றிருத்தல்) வெற்றிகரமாக முடித்திருத்தல் வேண்டும். **அத்துடன்** அரசாங்க தொழில் நுட்பத் திணைக்களமொன்றில் கூட்டுத்தாபனமொன்றில் **அல்லது** நன்கு மதிக்கப்பட்ட பிரத்தியேக உடன் படிக்கையாளரால் நடாத்தப்படும் சிவில் இயந்திர வேலைத்தலமொன்றில் மூன்று வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

**அல்லது**

(ii) இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி ஒன்றில் மாலை நேரப் பயிற்சியினை, கட்டட நிர்மாணத்தில்/படத் தயாரிப்புப் பொறியியலில்/சுகாதாரப் பொறியியலில் வெற்றிகரமாக முடித்திருத்தல் வேண்டும். **அத்துடன்** பொறுப்புவாய்ந்த முறையில் வேலைகளை மேற்பார்வை செய்வதில் நாலுவருட வினைத்திறமை அனுபவம் இருத்தல் வேண்டும்.

**அல்லது**

(iii) அரசாங்க சிரேட்ட தொழில் நுட்பத் தாபனமொன்றில் கனிட்ட தொழில் நுட்ப அலுவலர் பட்டப் (சிவில்) பயிற்சியை வெற்றிகரமாக முடித்து இருத்தல் வேண்டும். **அத்துடன்** அரசாங்க தொழில் நுட்ப அலுவலகத்தில்/கூட்டுத்தாபனத்தில்/சபை அல்லது தனியார் தாபனத்தில் மேற்பார்வை முறையில் மூன்று வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

**அல்லது**

(iv) உதவிப் பரிசோதகர் உயர்ச்சிக்கென பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் தொழில் நுட்ப அலுவலர் பரீட்சையில் பின்வரும் பாடங்களில் குறைந்தது ஐந்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் :—

கட்டட நிர்மாணமும் பராமரிப்பும்
பரிமாண மதிப்பீடுகளை எடுத்தல்
சிற்ப வேலைப்பாடுகளும் மாதிரி வரைதல்களும்.
அளப்பனவுக்கும் மட்டம்பார்த்தலுக்குமான விளக்கம்.

அளப்பனவுக்கும் மட்டம் பார்த்தலுக்குமான விளக்கம் (வெளிவேலை).
நீர்வழங்கலும் வடிகாலமைப்பும்.
பாலங்களமைப்பும் பாரிய கட்டடங்களமைப்பும்.
வீதிகளமைப்பும் பராமரிப்பும்.

**அத்துடன்** பலமான கொங்கிறீற்று வேலை மேற்பார்வையில்/உருக்குத் தயாரிப்பு வேலையில்/கட்டடப் பராமரிப்பு வேலையில்/மதிப்பிடுவதிலும் பரிமாண அளவுகளில் உண்டியல்களைத் தயாரிப்பதிலும்/நிர்மாண அமைப்பு முதலியவற்றில் நேரடித் தொழில் மேற்பார்வை முறையில் மூன்று வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

(ஈ) 1973 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 1 ந் திகதி 20 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்குக் கூடாமலும் இருத்தல் வேண்டும் ;

(உ) பின்வரும் மிகக் குறைந்தளவு உடற் தகைமைகளையாவது உடையவராக இருத்தல் வேண்டும் :—

(i) உயரம் : 5 அடி 4 அங்குலம்
(ii) நிறை : 105 இருத்தல்
(iii) மார்பளவு (விரியாதளவு) : 32 அங்குலம்

(ஊ) கடற்படைத் தளபதியைத் திருப்திப்படுத்தும் வகையில் வைத்திய பரீட்சை ஒன்றில் சித்தி பெறுதல் வேண்டும்.

3. தெரிவுக்கு முன்னர் பரீட்சை ஒன்றிற்கு ஈடுபடும்படி அபேட்சகர் வேண்டப்படுவர்.

4. நியமனத்திற்கு முன்னர் விசேட கடமைகளில் 2 தொடக்கம் 4 கிழமைகளுக்கு ஆரம்ப பயிற்சியொன்று அபேட்சகர்களுக்கு அளிக்கப்படும்.

5. காலத்திற்குக் காலம் திருத்தம் செய்யப்படும் ஒழுங்கு விதிகளுக்கு அமையவும் ; கடலோடிகளின் ஆட்திரட்டலுக்கமையவும், 1950 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சேவை ஒழுங்கு விதிகளுக்கு அமையவும்,; (1950 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 9 ஆம் திகதிய 10,187 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது) சேவையில் சேர்க்கப்பட்ட திகதிகளிலிருந்து அபேட்சகர்களின் சேவை கணிக்கப்படும். நிலையான கடற்படையில் கட்டாய சேவைக்காலமானது எந்தவொரு கடலோடிக்கும் தற்பொழுது 12 வருடங்களாகும். 20 வருடங்களுக்கு மேற்படாத, மேலும் ஓர் காலத்திற்குத் திரும்பச் சேவையில் சேர்ப்பதற்கு கடற்படைத் தளபதியினால் அவர் அனுமதிக்கப்படலாம். 22 வருடங்களான ஓர் தொகை காலத்திற்கு ஓர் மாலுமி சேவை புரியச் சாதாரணமாக அனுமதிக்கப்படலாம்.

6. இத்தகைய பதவிகளுக்கான சம்பள விகிதங்களுக்கு 1970 ஆம் ஆண்டின் கடற்படைச் சம்பளக் கோப்புப் பொருந்துவனவாகும். சம்பளக் கோப்பின் சுருக்கம் கீழே கொடுக்கப்பட்டவாறு இப்பதவிகளுக்குப் பொருந்துவனவாகும் :—

| | பிரிவு I சம்பள அளவு | விசேட பிரிவு சம்பள அளவு |
|---|---|---|
| புனைகையர் வகுப்பு III அல்லது II | 4,920–10 × 90 —5,820 | — |
| புனைகையர் வகுப்பு I அல்லது பிரதான புனைகையர் | — | 5,940–10 × 90–6,840 |
| பிரதான மாஸ்டர் புனைகையர் | — | 6,480–10 × 144–7,920 |

பின்வரும் சம்பளப்படிகளும் வழங்கப்படும் :—

(அ) **விவாகப்படி.**—அரசாங்க சேவையில் பெறுவதுபோல் தவணைகளும், நியதிகளும், விகிதங்களும் இருக்கும் ;

(ஆ) **சலவைப்படி.**—(i) ஒரு மாலுமி உண்டிச்சாலை ஒன்றில் வதிபவரானால் அவருடைய கடற்படை உடைகளை இலவசமாகக் கடற்படைச் செலவில் சலவை செய்வதற்குத் தகுதியுடையவராவர்;

(ii) ஒரு மாலுமி வெளியில் வதிபவரானால் அவருடைய கடற்படை உடைகளைச் சலவை செய்வதற்கான செலவுப்படியைப் பெறுவதற்குக் கடற்படைத் தளபதியினால் அனுமதி வழங்கப்படுமானால் அதைப்பெறத் தகுதியுடையவராவர் ;

(இ) **நன்னடத்தைப்படி.**—நன்னடத்தைப்பட்டி உள்ள ஒவ்வொரு மாலுமிக்கும் நன்டத்தைப்படி வழங்கப்படும். அத்தகையவற்றில் பின்வரும் ஓர் விகிதப்படி அவருக்கு உரியதாக இருக்கும் :—

| | ஒருநாளைய விகிதங்கள் ரூ. | ச. |
|---|---|---|
| (i) 4 வருடத் தகைமைச்சேவை முடித்து ஒரு பட்டிக்கு... | 0 | 25 |
| (ii) 8 வருடத் தகைமைச்சேவை முடித்த இரண்டு பட்டிகளுக்கு ... ... | 0 | 50 |
| (iii) 12 வருடத் தகைமைச்சேவை முடித்த மூன்று பட்டிகளுக்கு ... ... | 0 | 75 |

பிரசுரிக்கப்பட்ட இத்தகைய பதவிகளின் தரம் (கடற்படையில்) பெற்றி ஆபிசருக்கும், (தரைப்படையில்) சார்ஜன்றுக்கும் சமானமாக இருக்கும். புனைகையர், இப்பதவியிலிருந்து பிரதான மாஸ்டர் அலுவலர் (கடற்படையில்) பதவிக்கு உயரலாம். இது ஆணையில்லா விகிதமாக தரைப்படையிலுள்ள I ஆம் வகுப்பு ஆணை அலுவலர் பதவிக்குச் சமானமாக இருக்கும். ஒரு ஆணை தேவைப்படுமெனக் கண்டால் தொழில்நுட்ப அலுவலர் போல் ஆணைப்படுத்த அவர்களுக்குச் சந்தர்ப்பமும் உள்ளது.

7. பின்வரும் விதிகள் ஆட்சேர்த்தல் விண்ணப்பங்களுக்கு எடுத்தாளப்படும் :

(அ) இந்த அறிவித்தலின் கீழ் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்தைப் போல் விண்ணப்பகாரரின் சொந்தக் கையெழுத்தினால் விண்ணப்பங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்கள், ஆட்சேர்த்தல் அலுவலர், இலங்கை கடற்படை, த. பெ. இல. 593, கொழும்பு 1, என்ற முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். தபாலுறையில் இடது மேற்பக்க மூலையில் "ஆட்சேர்த்தல் புனைகையர் கிளை" என குறிக்கப்படுவதுடன் 1973 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 1 ந் திகதி பி.ப. 3.30 மணிக்கு முன்னர் கடற்படைத் தலைமை அலுவலகத்தை வந்தடையுமாறு அனுப்புதல் வேண்டும். அரசாங்க சேவையாளரின் விண்ணப்பங்கள், அவ்வத்திணைக்களத் தலைவர்க்கு ஊடாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பகாரர் தெரிவு செய்யப்பட்டால் அத்திணைக்களத்திலிருந்து விடுவிக்கப்படுவார் என்ற தொடர்புக் கடிதத்துடன் அனுப்புதல் வேண்டும் ;

(இ) விண்ணப்பங்கள் பின்வரும் பிரதிகளுடன் மட்டும் இணைத்து அனுப்புதல் வேண்டும் :—

(i) பிறப்புப் பதியப்பட்ட பத்திரங்கள் அல்லது விண்ணப்பகாரரின் பிறப்புப் பதியப்படாத காரணத்திற்காக பெரும்பாகப் பதிவுகாரரினால் வழங்கப்பட்ட, வயதினைக்காட்டும் விசேட பத்திரம் ;

குறிப்பு.—ஞானஸ்நானப் பத்திரங்கள், உதவி நன்கொடைப் பாடசாலைகளுக்காக, ஒழுங்குப் பிரமாணங்களின் கட்டளைக்காக வழங்கப்பட்ட பிறப்புப் பத்திரங்கள், சாதகக் குறிப்புக்கள் முதலியன ஏற்றுக்கொள்ளப்படமாட்டா ;

(ii) பெற்றுள்ள உயர்தர கல்வித்தகைமைகளுக்கான பத்திரங்கள். அத்துடன் இவ்வறிவித்தலின் 2(அ) வில் வேண்டப்பட்ட கல்வித் தகைமைகளை நிரூபிப்பதற்குரிய பத்திரங்கள் ;

(iii) இவ்வறிவித்தலின் 2(இ) இல் வேண்டப்பட்ட நியதிகளுக்கு இணங்க, தேவையானவிடத்து, தொழில் நுட்பக் கல்வித் தகைமைகளுக்கான பத்திரங்கள்.

(iv) அண்மையில் பெற்ற நான்கு நற்சாட்சிப்பத்திரங்கள். அவற்றில் ஒன்று விண்ணப்பகாரரின் தகைமைகளையும், நற்சான்றினையும், நியமனத்திற்குத் தகுதியென்பதனையும் குறிப்பிட்டு எழுதப்பட்ட அப்பகுதிக் கிராமசேவையாளரின் நற்சான்றிதழாக இருக்கவேண்டும். இன்னொன்று தற்பொழுது அல்லது கடைசியாக வேலைகொடுத்தவரிடமிருந்து பெறப்பட்டதாக இருக்க வேண்டும் ;

(v) விண்ணப்பகாரரின் கடைசிப் பிறந்த தினத்தின்றோ அதற்குப் பிறகோ எடுக்கப்பட்ட புகைப்படமொன்று இணைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பகாரர் புகைப்படத்தின் பின்பக்கத்தில் கையெழுத்தை இடவேண்டும்.

குறிப்பு.—விண்ணப்பகாரரின் பெயர் விண்ணப்பத்தில் இருப்பது போல பிறப்புச் சாட்சிப் பத்திரத்திலும், கல்வித் தகைமைப் பத்திரங்களிலும் ஒரே மாதிரி இருக்க வேண்டும். விண்ணப்பத்திலும் புகைப்படத்திலும் உள்ள கையொப்பங்கள் விண்ணப்பகாரரின் வழக்கமான கையொப்பமாக இருக்கவேண்டும்.

8. 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்ட ஏற்பாட்டிற்கும், வேறு ஏதாவது ஒழுங்குப் பிரமாணங்களுக்கும், அதற்குச் சமானமாகக் காலத்திற்குக் காலம் அரசாங்கத்தினால் வெளியிடப்படும் அறிவுறுத்துரைக் கட்டளைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கி ஒழுகுவதாகத் தெரிவு செய்யப்பட்டு நிலையான கடற்படையில் சேர்க்கப்படும் அபேட்சகர்கள் எழுத்து மூலமான சான்று அளித்தல் வேண்டும்.

9. முன்னைய சேவையாளர் இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்குங்கால், மேலே காட்டப்பட்ட பொது நிபந்தனைகளுக்குப் பதிலாகச் சலுகை பெறவேண்டின் பின்வருவனவற்றை உடையவராக இருத்தல் வேண்டும் :

(i) பிரித்தானிய ஐக்கிய இராச்சிய படைச்சேவையில் அல்லது இலங்கை பாதுகாப்புப் படையில் ஒரு வருட சேவைக்குக் குறையாதிருக்க வேண்டும் ;

(ii) போர்ப்படையில் "மிகவும் நன்று" என்றதற்குக் குறையாத ஒழுக்கவியலுக்கு உயர்த்தப்பட்டிருக்க வேண்டும் ;

(iii) இணைக்கப்பட்ட சேவைத் தொகையில் சரியான வருடங்கள், மாதங்கள், நாட்கள் இருக்க வேண்டும்.

10. விண்ணப்பகாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டால் மட்டும் கல்வித் தகைமைப் பத்திரங்களினதும் நற்சாட்சிப் பத்திரங்களினதும் மூலப் பிரதிகளைச் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பத்துடன் இணைக்கப்படும் எந்தவொரு மூலப்பிரதிச் சான்றிதழும் தொலைந்து போனால் இலங்கை அரச கடற்படை அதற்குப் பொறுப்புடையதாகாது.

11. விண்ணப்பம் ஒன்று தொலைந்து போவதினாலோ அல்லது தபால் பகுதியினால் தாமதமாகுவதினாலோ எழும் முறைப்பாடு பரிசீலனை செய்யப்படமாட்டாது. அபேட்சகர் தம் விண்ணப்பங்களைத் தாமதிப்பது அவர்களின் சொந்தப்பிழையேயாகும்.

12. எல்லா விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டமை அறிவிக்கப்படும்.

13. முடிவுத் திகதிக்கு முன்னர் திணைக்களத் தலைவரினால் விண்ணப்பம் ஏற்கப்பட்டு காலதாமதத்திற்கான காரணம் தொடர்பாக விதப்புரை அனுமதியுடன் அத்திணைக்களத் தலைவர் குறித்தாலன்றி திணைக்களத் தலைவருக்கூடாக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் இவ்வலுவலகத்திற்கு முடிவுத் திகதிக்குப் பிந்தி வரும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

14. தகைமையெனக் காணப்படும் அபேட்சகர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நேர்முகப் பரீட்சைகளுக்கு கடற்படைத் தெரிவுச் சபையின் முன் சமூகமளிக்கும்படி வேண்டப்படுவர். திகதிகளும் நேரங்களும் கடிதமூலம் அறிவிக்கப்படும். நேர்முகப் பரீட்சையில் ஆட்சேர்த்தலுக்குத் தகுதியெனக் காணப்படும் அபேட்சகர்கள் நியமனத்திற்கு முன்னர் ஒன்று அல்லது மேற்பட்ட வைத்தியப் பரீட்சைகளுக்கு கொழும்புக்கு வரும்படி வேண்டப்படுகின்றனர். பிரயாணச் செலவுகளோ அல்லது வேறு செலவுகளோ நேர்முகப் பரீட்சைகளுக்கு அல்லது வைத்தியப் பரீட்சைகளுக்கு வருவதற்காக கொடுக்கப்படமாட்டா.

15. ஒருவர் அபேட்சகரை விரும்பி விதப்புரை நல்கி ஒரு நற்சான்றிதழை வழங்கலாமே அன்றி அபேட்சகர் தெரிவு செய்யப்படுவதற்கு பேச்சு மூலமோ அல்லது உதவி தேடுவதன் மூலமோ உதவ முன்வரின் அபேட்சகரின் தகைமை நிராகரிக்கப்படும்.

16. தெரிவுக்கு முன்னர் தகைமையற்றவரெனக் காணப்பட்டால் அதாவது விண்ணப்பத்தில் ஏதாவது முறைப்பாடுகள் பிழையெனக் கண்டு பிடிக்கப்பட்டால் விண்ணப்பகாரரின் தகைமை நிராகரிக்கப்படும். நியமனத்திற்குப் பின்னர் காணப்பட்டால் ஒழுங்கு நடவடிக்கையும் கடற்படையிலிருந்து நீக்கம் செய்யப்படுவதற்கும் ஆளாவர்.

டீ. பி. குணசேகரா,
கொமொடோர்,
கடற்படைத் தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை கடற்படை,
த. பெ. இல. 593,
கொழும்பு 1, 1973 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4 ந் திகதி.

மாதிரி விண்ணப்பப் படிவம்

மாலுமிகளுக்கான வெற்றிடங்கள்-இலங்கை கடற்படை

1. முழுப் பெயர் (பெரிய எழுத்துக்களில்) :————.
2. தபால் முகவரி :————.
3. மாகாணம் :————.
4. பிறந்த திகதி :————.
5. 1973 செப்டெம்பர் 1 ந் திகதி வயது :————.
6. சித்தியடைந்த கல்வித்தகைமைகளும் பாடங்களும், திகதிகளும் :————.
7. படித்த பாடசாலைகள் :————.
8. வேறு ஏதாவது கல்வித் தகைமைகள் :————.
9. விளையாட்டின் பெறுபேறுகள் :————.
10. பாடசாலையை விட்டு விலகியதிலிருந்து செய்த தொழில் (முழு விபரங்கள் தருக) :————.
11. தற்போதைய தொழில் :————.
12. உயரம் :———— அடி———— அங்குலம்.
நிறை,:———— இருத்தல்.
மார்பளவு :———— அங்குலம்.
13. நாட்டினம் :————.
14. அண்மையிலுள்ள பொலிஸ் நிலையம் :————.
15. கடற்படை, தரைப்படை, ஆகாயப்படை, தொண்டர் படையில் முன்னர் சேவையாற்றியிருந்தால் அதன் முழு விபரங்களும் திகதிகளும், அப்பதவிகள் நிகழ்ந்த விதங்களும் :————.
16. விலகியபொழுது/நீக்கப்பட்டபொழுது ஒழுக்கம் :————.
17. வேறு ஏதாவது தொடர்புள்ள விபரங்கள் :————.
18. நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கப்பட்டவர்களின் பெயர்களும் பதவிகளும் :

(அ) ............................இன் கிராமசேவையாளா
(ஆ) .................... .................... ............
(இ) .................... .................... ............
(ஈ) .................... .................... ............

என்னால் மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவிற்குச் சரியானவையென்று, எனது நம்பிக்கையின் பேரில் உறுதியளிக்கின்றேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

7-569—20.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 69

**கட்டடங்கள் திணைக்களம்**

**இரண்டாந்தர படவரைஞர் பதவிகள்**

மேற்படி பதவிகளுக்காய விண்ணப்பங்கள் கோருதல் சம்பந்தமாக 6.7.73 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தல் தொடர்பாக மேலும் தருவதாவது.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 1973 ஆடி மாதம் 31 ஆம் திகதி வரைக்கும் நீடிக்கப்பட்டுள்ளது.

யே. பீ. வீரரத்ன,
கட்டடங்கள் பணிப்பாளருக்காக.

07.07.1973.

7-587—20.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 69

---

இல. 2/1/4.

**கமத்தொழிற்றிணைக்களம்**

**ஆராய்ச்சி தகுதிகாண் உத்தியோகத்தர்/ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி**

விவசாயத் திணைக்களத்திலுள்ள ஆராய்ச்சி தகுதிகாண் உத்தியோகத்தர்/ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இந்த விளம்பரத்தில் கீழ் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்தில் எழுதப் பெற்று செயலாளர், விவசாய காணி அமைச்சு, 315, வக்சோல் வீதி, த.பெ. 569, கொழும்பு-2 என்ற முகவரிக்கு பின்வரும் திகதியில் அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள், 1973 ஓகத்து மாதம் 10 ம் திகதி.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 1973 ஓகத்து மாதம் 10 ம் திகதி.

குறிப்பு.—

(1) மாதிரி விண்ணப்பப் பத்திரத்தின்படி தயாரிக்கப்படாத விண்ணப்பப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

(2) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பம் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாளராவர்.

(3) வெளிநாட்டிலுள்ள அபேசகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களை பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். இவ்வபேட்சகர்கள் விரும்பினால், விண்ணப்பப் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டிற்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை விவசாயக் காணி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

4. **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாடுகளிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலமுடையவர்களாயிருக்கிறார்களாவென்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவர். அத்தகைய மருத்துவச் சோதனைக்கான கட்டணத்தையும் இலங்கைக்குப் பிரயாணஞ் செய்வதற்கான தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—

(1) பதவி நிரந்தரமானதாகும். அ. சே. ச. நிதிக்கு உதவு தொகை செலுத்துதல் வேண்டும். இந்நியமனம் முதற்கண் மூன்று ஆண்டுகளுக்கு தகுதிகாண் நிலையில் அமையும்.

(2) பரீட்சாத்த காலமாகிய 3 வருடத்துள் தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள் ஓர் பயிற்சியைப் பெற வேண்டியேற்படும். விவசாய திணைக்களத்தால் குறிக்கப்படும் தன்மையுடைய வெளிநாட்டு பயிற்சியை பெறவேண்டி அவருக்கு/அவளுக்கு ஏற்படும். பயிற்சி காலத்தை திருப்திகரமாக முடித்து திணைக்களகம் தீர்மானிக்கும் பயிற்சியை அவர்/அவள் பெற்றுக் கொண்டதன் பின்னர் ஆராய்ச் உத்தியோகத்தர் பதவியில் நிரந்தரம் ஆக்கப்படுவர்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் வருமாறு—வருடத்துக்கு ரூபா 7,440 இல் ஆரம்பமாகி ரூபா 360 வருடாந்த அதிகரிப்பு 10 உம் ரூபா 480 வருடாந்த அதிகரிப்பு 11 உம் உள்ளதாக ரூபா 16,320 வரை அதிகரிக்கும். (ரூபா 11,520 உம் ரூபா 14,880 உம் சம்பளத்திட்டத்தை அடைய முன் வினைத்திறமைகாண்தடை உண்டு.)

குறிப்பு—

(அ) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் வருடமொன்றுக்கு ரூபா 11,520 க்கு மேல்வருமுன் குறிப்பிடப்பட்ட முதுமானிப் பட்டம் அல்லது டிப்ளோமாப் பட்டத்தில் உயர்ந்த தரத்தையுமோ தனது சொந்த வேலை சம்பந்தமான விஞ்ஞான நடவடிக்கைகளில் பெறவேண்டும்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையிலிருந்து முதுஞானிப் பட்டம் (எம்எஸ்சி) அல்லது கலாநிதி (பிஎச். டி.) ப் பட்டத்தைப் பெற்றுள்ள அபேட்சகர்கள், தெரிவு செய்யப்படுவாராயின், அவர்கள் மேற்கூறிய விகிதத்தின் பிரகாரம் வருடமொன்றுக்கு ரூபா 7,800 ஆன சம்பளத்தில் அமர்த்தப்பட தகுதியுடையவர் ஆவர்.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளையுடையவர் என்பதற்குத் திருத்தியான சான்று காட்டுதல் வேண்டும்.—

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல்நலமுடையவராயுமிருத்தல் வேண்டும்.

(ஆ) முதலாவது அல்லது இரண்டாவது வகுப்பில் சித்தியடைந்த அபேட்சகர்கள் 1973.8.10 இல் 30 வயதுக்குக் கூடாதவர்களாயும் அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையில் முதுமானிப்பட்டம் பெற்றவர்கள் 35 வயதுக்குக் கூடாதவர்களாயும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாடு கிடையாது.)

(இ) (1) அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையில் விவசாயத்தில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பில் சிறப்புப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது கீழ்க் காணும் பாடங்களில் ஒன்றினைப் பிரதான பாடமாக்ப் பெற்றிருத்தல் வேண்டும்.

(அ) தாவரவியல்
(ஆ) விலங்கியல்
(இ) இரசாயனம்
(ஈ) விவசாயப் பொறியியல்

(2) அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையில் கீழ்க்காணும் வேலை ஒன்றின் சம்பந்தமாகச் சட்ட முதுமானிப் பட்டம் பெற்றவராய் இருத்தல் வேண்டும்.

(அ) பிரயோக பூச்சியியல்
(ஆ) தாவர நோயியல்
(இ) மண் கூற்றியல்
(ஈ) மண் விஞ்ஞானம்
(உ) பூங்கனியியல்
(ஊ) தாவர வளர்ப்பு
(எ) விவசாய பொறியியல்
(ஏ) பயிராக்கவியல்
(ஐ) உணவு நுட்பவியல், அல்லது

(3) இத்திணைக்களத்தில் 10 வருட சேவை செய்தவராயும் ஆராய்ச்சியில் விருப்புள்ளவராயும், அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையில் விவசாயத்தில் பட்டம் பெற்றவராயும் அல்லது கீழ்க்காணும் பாடம் ஒன்றினை பிரதான பாடமாக எடுத்தவராயும் இருத்தல் வேண்டும்.

(அ) தாவரவியல்
(ஆ) விலங்கியல்
(இ) இரசாயனம்
(ஈ) விவசாயப் பொறியியல்

குறிப்பு.—அனுபவம் உம்/அல்லது முதுமானிப் பட்டம் தகைமையுள்ள அபேசகர்களுக்கு சலுகை அளிக்கப்படும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும் பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும்—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (முக்கிய குறிப்பு.—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு அமைக்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது.)

(ஆ) பல்கலைக்கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்,

(இ) குணச்சான்றிதழ் இரண்டு, இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்,

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/ உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்,

(உ) சிங்களத்தில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு.—(1) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச்சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர். அரசாங்க சேவை அதிகாரசபை என் முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக் கூடாது.

7. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப்பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், (II அ) ம் பிரிவில் வெளியிடப்பட்டுள. அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பகாரிகளுக்கு விண்ணப்பம் பெற்றமைபற்றி அறிவிக்கப்படும். இத் தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து இரண்டு கிழமைகளுள் விண்ணப்பம் பெற்றமைபற்றிய அறிவித்தலைப் பெருவிடின் உடனே, எனக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தமது விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையவராகார்.

ஏ. டீ. எம். சில்வா,
செயலாளர்,
விவசாயக் காணி அமைச்சு.

விவசாயக் காணி அமைச்சு,
315, வோக்சோல் வீதி,
த.பெ. இல. 569,
கொழும்பு 2,
1973.07.06.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

(சாதனங்களையோ சாதனங்களின் படிகளையோ விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் ஆகாது.)

கமத்தொழிற்றிணைக்களம்

**ஆராய்ச்சி தகுதிகாண் உத்தியோகத்தர்/ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி**

1. முழுப்பெயர் :————.
(தெளிவான எழுத்துக்களில்)

2. அஞ்சல் முகவரி :————.
(அஞ்சல் முகவரியில் மாற்றம் ஏற்றம் ஏற்பட்டால் உடன் அறிவிக்கப்படுதல் வேண்டும்)

3. (அ) பிறந்த திகதி :—
வருடம் :————. மாதம் :————. நாட்கள் :————.
(ஆ) உள்ளூர் விண்ணப்பங்கள் முடிவடையும் திகதியிலன்று சரியான வயது :————.

4. நீர் இலங்கைப் பிரசையா ? வம்சாவழி அல்லது பதிவுப் பிரசையா ? எனக் குறிப்பிடுக :————.
(இலங்கைப் பதிவுப் பிரசையானுல் பத்திரத் தொடர்பு இலக்கமும் திகதியும் குறிப்பிடுக)

5. பிறந்த இடம் :————.
(அ) விண்ணப்பகாரர் :————.
(ஆ) விண்ணப்பகாரரின் தந்தை :————.
(இ) விண்ணப்பகாரரின் தந்தைவழிப்பாட்டன் :————.
(ஈ) விண்ணப்பகாரரின் தந்தைவழிப் பூட்டன் :————.

குறிப்பு.—விண்ணப்பகாரர் இலங்கையில் பிறந்தவராயின் (ஆ) அல்லது (இ), (ஈ) இரண்டும் (அ) வுடன் சேர்த்து நிரப்பப்படுதல் வேண்டும். அவர் இலங்கையிற் பிறக்காதவிடத்து (அ) வுடன், (ஆ), (இ) என்பனவோ அல்லது (இ), (ஈ) என்பனவும் நிரப்பப்படல் வேண்டும்.

6. (அ) ஆணு ? பெண்ணு ? :————.
(ஆ) விவாகமானவர், தனிப்பட்டவர், விதவை, தாரமிழந்தவர் :————.

7. (1) சிங்களம் (2) தமிழ் (3) ஆங்கிலம் இவற்றில் சித்தியடைந்த ஆகக்கூடிய பரீட்சை :————.

8. 12 ஆம் வயதிலிருந்து படித்த பாடசாலைகள், கல்லூரிகள், வேறு கல்வித் தாபனங்கள் :—

பொதுக்கல்வி

| பாடசாலைக் கல்லூரி | தொட்டு | முடிய |
|---|---|---|
| (1) ———— | ———— | ———— |
| (2) ———— | ———— | ———— |

உத்தியோகக் கல்வி

| கல்வித் தாபனம் | தொட்டு | முடிவு |
|---|---|---|
| (1) ———— | ———— | ———— |
| (2) ———— | ———— | ———— |

9. விளையாட்டுகளின் விபரங்களும், மற்றும் அதில் பெற்ற திறமை தகைமைகளும், அத்துறையில் பதவிவகித்த பொறுப்பான உத்தியோகத்தின் விபரங்களும் :————.

10. நீர் கடன் தொல்லைகள் இல்லாதவரா ? கடன் பொறுப்புகள் இருக்கும் பட்சத்தில் கடன் பொறுப்புகளின் அளவுகள் என்ன ? :————.

11. சட்ட நீதிமன்றங்களில் ஏதாவது குற்ற பாதகத்திற்குக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறீரா ? அப்படியானுல் வழக்கு இலக்கத்தை எடுத்துக்காட்டி திகதிகளோடு முழு விபரங்களையும் குறிப்பிடுக :————.

12. பாடசாலைக் கல்வி, உத்தியோகக் கல்வித் தகைமைகள் (பல்கலைக்கழகத்து சகல பட்டங்கள், திறமைகள், உத்தியோகக் கல்வித் தகைமைகள் முதலியவற்றின் விபரங்களைத் திகதி, சித்தி, தரம் இருந்தால் அவை எடுத்த பாடங்கள், கல்வித்தாபனப் பெயர்கள் இவற்றுடன் தருக) :————.

13. இப்போதய தொழிலும் முன்னர் ஏதேனும் பதவியிலிருந்தால் அப்பதவிகளும், (பதவி ஏற்றுக்கொண்ட திகதியும், விட்டு விலகிய திகதியும், கடைசியாகப் பெற்ற ஆண்டுச் சம்பளமும் குறிப்பிடப்படல் வேண்டும் :—

| பதவி | தொட்டு | முடிய | ஆண்டுச் சம்பளம் |
|---|---|---|---|
| (1) ———— | ———— | ———— | ———— |
| (2) ———— | ———— | ———— | ———— |
| (3) ———— | ———— | ———— | ———— |

முக்கியம்.—அரசாங்க உத்தியோகத்திலிருந்து நீக்கிய காரணம் கீழேயுள்ள 15 ஆம் நிரல் பிரிவில் குறிப்பிடப்படல் வேண்டும்.

14. விசேட தகைமைகள்—அறிவித்தலில் குறித்துக் காட்டிய விசேட தகைமைகள் அல்லது அனுபவம் உடையவரா ? அப்படியானுல் அவற்றின் முழு விபரங்களைத் திகதிகளுடன் தருக. அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் ஏதாவது விசேட தேவைகள் குறித்துக் காட்டப்பட்டிருந்தால் பார்க்குக :————.

15. மேலும் வேறு விபரங்கள் :————.

இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னுல் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன். இதனுள் அடங்கியிருக்கும் விபரங்கள் எவையேனும் பொய்யானவை, சரியற்றவை என்று தெரிவு செய்யப்படுமுன் அறிந்தால் தகுதியற்றவனுக்கப்படுவேன் என்றும் நியமனம்பெற்ற பிற்பாடு சரியற்றவையென்று கண்டு பிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றிப் பதவியால் நீக்கப்படுவேன் என்றும் நான் அறிந்திருக்கிறேன்.

————,
திகதி :————. விண்ணப்பகாரரின் கையொப்பம்.

(விண்ணப்பகாரர் அரசாங்க சேவையில் இருப்பவரெனின் அப் பகுதித் தலைவரின் அறிக்கை)

————,
திணைக்கள/அமைச்சு தலைவரின் கையொப்பம்.

திகதி :————.

7-645/1—20.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 69

இல : 2/1/14

**கமத்தொழிற்றிணைக்களம்**

மிருக வைத்தியர் பதவி

விவசாய திணைக்களத்திலுள்ள மிருக வைத்தியர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இந்த விளம்பரத்தில் கீழ் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்தில் எழுதப்பெற்று செயலாளர், விவசாய காணி அமைச்சு, 315, வக்சோல் வீதி, த. பெ. 569, கொழும்பு-2 என்ற முகவரிக்கு பின்வரும் திகதியில் அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள் : 1973, ஓகத்து மாதம் 10 ம் திகதி.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 1973, ஓகத்து மாதம் 10 ம் திகதி.

குறிப்பு.—(1) மாதிரி விண்ணப்பப் பத்திரத்தின்படி தயாரிக்கப்படாத விண்ணப்பப் பத்திரங்கள் நிராகரிககப்படும்.

(2) விண்ணப்படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பம் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாளராவர்.

(3) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களை பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். இவ்வபேட்சகர்கள் விரும்பினால், விண்ணப்பப் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டிற்கு மிகக் கிட்டவுள்ள இலங்கை பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை விவசாயக் காணி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(4) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாடுகளிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாயிருக்கிறார்களாவென்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்கு பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

(2) **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதாகும். உதவுதொகைகளை அரசாங்க சேவைச் சகாய நிதிக்குச் செலுத்தல் வேண்டும். இந்நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்குட்பட்டதாகும்.

(3) **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—(1) இலங்கைப் பல்கலைக்கழகத்தில் மிருக வைத்திய விஞ்ஞானப்பட்டதாரிகளுக்கு திரட்டிய சம்பளம்—ஆண்டொன்றுக்கு ரூபா 6,720 தொடக்கம் ஆண்டொன்றுக்கு ரூபா 360 ஆன 12 ஏற்றங்களாலும் ரூபா 480 ஆன 5 ஏற்றங்களாலும் ரூபா 13,440 வரை உயரும்.

குறிப்பு.—நன்கு மதிக்கப்படுமொரு தாபனத்திலே விதித்தது ஒரு முதுமானி பட்டதாரிப் பயிற்சி நெறியினைப் பின்பற்றுவோர் அல்லது இத்திணைக்களத்தால் விதிக்கப்படும் பரீட்சையிற் சித்திபெறுவோர் மட்டும் ரூபா 11,040 க்கு மேற் செல்ல அனுமதிக்கப்படுவர்.

(2) பிற பல்கலைக்கழகங்களின் மிருகவைத்திய விஞ்ஞானப் பட்டதாரிகள்—இவர்களுக்குரிய சம்பளம் நிர்வாக பணிப்பாளருடன் கலந்தாலோசித்து நிர்ணயிக்கப்படும்.

(4) **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளையுடையர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல்நலமுடையவராயுமிருத்தல் வேண்டும்,

(ஆ) 1973.8.10 இல் 22 வயதுக்கு குறையாமலும் 35 க்கு அதிகரிக்காமலும் இருக்க வேண்டும்.

(அரசாங்க சேவையில் ஏற்கனவே உள்ளோர் விடயத்தில் வயதின் மேலெல்லை கவனிக்கப்படமாட்டாது.)

(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தின் மிருக வைத்திய விஞ்ஞானப்பட்டம் உள்ளமை.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும் பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும்..

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (முக்கிய குறிப்பு.—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது.)

(ஆ) பல்கலைக்கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்,

(இ) குணச்சான்றிதழ் இரண்டு, இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்,

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/ உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்,

(உ) சிங்களத்தில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு.—(1) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை என முகவரியிட்டனுப்பவேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக் கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள, அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பதாரிகளுக்கு விண்ணப்பம் பெற்றமைபற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து இரண்டு கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமைபற்றிய அறிவித்தலைப் பெறாவிடின் உடனே, எனக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத்தவறும் விண்ணப்பகாரர் தமது விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையவராகார்.

**ஏ. டீ. எம். சில்வா,**
செயலாளர்,
**விவசாயக் காணி அமைச்சு.**

விவசாயக் காணி அமைச்சு,
315, வோக்சோல் வீதி,
த. பெ. இல. 569,
கொழும்பு 2,
1973.7.6.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

(சாதனங்களையோ சாதனங்களின் படிகளையோ விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் ஆகாது)

கமத்தொழிற்றிணைக்களம்

**மிருக வைத்தியர் பதவி**

1. முழுப் பெயர் :————.
(தெளிவான எழுத்துக்களில்)

2. அஞ்சல் முகவரி :————.
(அஞ்சல் முகவரியில் மாற்றம் ஏற்பட்டால் உடன் அறிவிக்கப்படுதல் வேண்டும்)

3. (அ) பிறந்த திகதி :—
வருடம் :————. மாதம் :————. நாட்கள் :————.
(ஆ) உள்ளூர் விண்ணப்பங்கள் முடிவடையும் திகதியிலன்று சரியான வயது :————.

4. நீர் இலங்கைப் பிரசையா ? வம்சாவழி அல்லது பதிவுப் பிரசையா ? எனக் குறிப்பிடுக :————.
(இலங்கைப் பதிவுப் பிரசையானால் பத்திரத் தொடர்பு இலக்கமும் திகதியும் குறிப்பிடுக)

5. பிறந்த இடம் :—
(அ) விண்ணப்பகாரர் :————.
(ஆ) விண்ணப்பகாரரின் தந்தை :————.
(இ) விண்ணப்பகாரரின் தந்தை வழிப்பாட்டன் :————.
(ஈ) விண்ணப்பகாரரின் தந்தைவழிப் பூட்டன் :————.

குறிப்பு.—விண்ணப்பகாரர் இலங்கையில் பிறந்தவராயின் (ஆ) அல்லது (இ), (ஈ) இரண்டும் (அ) வுடன் சேர்த்து நிரப்பப்படுதல் வேண்டும். அவர் இலங்கையிற் பிறக்காத விடத்து (அ) வுடன், (ஆ), (இ) என்பனவோ அல்லது (இ), (ஈ) என்பனவும் நிரப்பப்படல் வேண்டும்.

6. (அ) ஆணா ? பெண்ணா ? :————.
(ஆ) விவாகமானவர், தனிப்பட்டவர், விதவை, தாரமிழந்தவர் :————.

7. (1) சிங்களம் (2) தமிழ் (3) ஆங்கிலம் இவற்றில் சித்தியடைந்த ஆகக்கூடிய பரீட்சை :————.

8. 12 ஆம் வயதிலிருந்து படித்த பாடசாலைகள், கல்லூரிகள், வேறு கல்வித்தாபனங்கள் :—

| பொதுக்கல்வி பாடசாலைக் கல்லூரி–தொட்டு–முடிய | உத்தியோகக் கல்வி கல்வித்தாபனம்–தொட்டு–முடிய |
|---|---|
| 1. | 1. |
| 2. | 2. |

9. விளையாட்டுகளின் விபரங்களும், மற்றும் அதில் பெற்ற திறமை தகமைகளும், அத்துறையில் பதவிவகித்த பொறுப்பான உத்தியோகத்தின் விபரங்களும் :————.

10. நீர் கடன் தொல்லைகள் இல்லாதவரா ? கடன் பொறுப்புகள் இருக்கும் பட்சத்தில் கடன் பொறுப்புகளின் அளவுகள் என்ன ? :————.

11. சட்ட நீதிமன்றங்களில் ஏதாவது குற்றப் பாதகத்திற்குக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறீரா ? அப்படியானால் வழக்கு இலக்கத்தை எடுத்துக்காட்டி திகதிகளோடு முழு விபரங்களையும் குறிப்பிடுக :————.

12. பாடசாலைக் கல்வி, உத்தியோகக் கல்வித் தகைமைகள் (பல்கலைக்கழகத்து சகல பட்டங்கள், திறமைகள், உத்தியோகக் கல்வித் தகைமைகள் முதலியவற்றின் விபரங்களைத் திகதி, சித்தி, தரம் இருந்தால் அவை எடுத்த பாடங்கள், கல்வித் தாபனப் பெயர்கள் இவற்றுடன் தருக) :————.

13. இப்போதைய தொழிலும் முன்னர் ஏதேனும் பதவியிலிருந்தால் அப்பதவிகளும், (பதவி ஏற்றுக்கொண்ட திகதியும், விட்டு விலகிய திகதியும், கடைசியாகப் பெற்ற ஆண்டுச் சம்பளமும் குறிப்பிடப்படல் வேண்டும்) :—

| பதவி | தொட்டு முடிய | ஆண்டுச் சம்பளம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

முக்கியம்.—அரசாங்க உத்தியோகத்திலிருந்து நீக்கிய காரணம் கீழேயுள்ள 15 ஆம் நிரல் பிரிவில் குறிப்பிடப்படல் வேண்டும்.

14. விசேட தகைமைகள்.—அறிவித்தலில் குறித்துக் காட்டிய விசேட தகைமைகள் அல்லது அனுபவம் உடையவரா ? அப்படியானால் அவற்றின் முழு விபரங்களைத் திகதிகளுடன் தருக. அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் ஏதாவது விசேட தேவைகள் குறித்துக் காட்டப்பட்டிருந்தால் பார்க்க :————.

15. மேலும் வேறு விபரங்கள் :————.

இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன். இதனுள் அடங்கியிருக்கும் விபரங்கள் எவையேனும் பொய்யானவை, சரியற்றவை என்று தெரிவு செய்யப்படுமுன் அறிந்தால் தகுதியற்றவனாக்கப்படுவேன் என்றும் நியமனம் பெற்ற பிற்பாடு சரியற்றவையென்று கண்டு பிடிக்கப்பட்டால் நட்ட ஈடு எதுவுமின்றிப் பதவியால் நீக்கப் படுவேன் என்றும் நான் அறிந்திருக்கிறேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

(விண்ணப்பகாரர் அரசாங்க சேவையில் இருப்பவரெனின் அப்பகுதித் தலைவரின் அறிக்கை)

————,
திணைக்கள/அமைச்சு தலைவரின் கையொப்பம்.

திகதி :————.

7-645/2—20.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 69

### குடாப்படுவை "பி" தர உப அஞ்சல் அதிபர் பதவி

நீர்கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் குடாப்படுவை உப அஞ்சல் அதிபர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப் பதவிக்கு ஆகக் குறைந்த மாதாந்தப் படி 50 ரூபாவாகும்.

2. விண்ணப்பதாரர் இலங்கையராகவும் 1973.08.31 ந் திகதி அன்று 21 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

3. மாநகர சபை எல்லைக்குள் 10 வருடங்களும் அதற்குக் கூடுதலான காலமும் நிரந்தர குடியிருப்பாளராக இருத்தல் வேண்டும். உப அஞ்சல் அலுவலகத்திற்கு அருகாமையில் உள்ள வட்டாரத்தில் அல்லது வட்டாரங்களில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

4. சிரேட்ட பாடசாலைத் தராதரப் பரீட்சையில்/க.பொ. த. (சாதாரணம்) பரீட்சையில் சிங்களம்/தமிழ்மொழி, எண்கணிதம்/ஆரம்ப கணிதம் உட்பட 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

5. குடாப்படுவை உப அஞ்சல் அலுவலகம் நிறுவுவதற்கு ஒரு தகுதியான கட்டிடம் ஒன்றை வாடகையின்றி விண்ணப்பகாரர் கொடுத்தல் வேண்டும்.

6. கொழும்பு 1, எச்சலன் சதுர்க்கம், 5 ம் கட்டிடத்திலுள்ள கொழும்பு வடக்கு அஞ்சல் அலுவலகங்களின் பெரும்பாக அத்தியட்சரிடமிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய அச்சடிக்கப்பட்ட படிவங்களில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் அவரை 1973.08.31 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக அடையும் வண்ணம் அனுப்பப்படல் வேண்டும்.

7. மேலதிக விபரங்கள் தேவைப்படின் அவற்றை அஞ்சல் அலுவலகங்களின் பெரும்பாக அத்தியட்சரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

எ. ஆர். எம். ஜெயவர்த்தன,
அஞ்சல் அதிபர் நாயகமும்
தொலைத் தொடர்பு அதிபரும்.

கொழும்பு, 05.07.73.

7-650—20.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 69

## நீதி அமைச்சு

### குற்றவியல் நீதிச்சேவை ஆணைக்குழுவில் பிரதம மொழிபெயர்ப்பாளர் பதவி (தற்காலிகம்)

குற்றவியல் நீதிசேவை ஆணைக்குழுவில் பிரதம மொழிபெயர்ப்பாளர் (தற்காலிக) பதவியொன்றிற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இவ்வலுவலகத்தினுல் அச்சிடப்பட்டு வழங்கப்படும் படிவங்களில் 1973, ஒகத்து மாதம் 15 ஆம் தேதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ என்னையடையத்தக்கதாக அனுப்பப்படல் வேண்டும்.

**குறிப்பு.**—(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப்படிவத்தை அனுப்புமாறு அஞ்சல் மூலம் வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையைத் தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்கசேவையில் உள்ளவரா அல்லவா என்பதையும் தெளிவாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப்படிவம், அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது, அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதைக் கடைசித் தேதிவரை தாமதிப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவார்.

2. **நியமன நியதிகளும், சேவை நிபந்தனைகளும்**
இப்பதவி தற்காலிகமானது. அரசாங்கசேவை ஏற்பாட்டு நிதியத்திற்கு உதவுதொகை வழங்கப்படுதல் வேண்டும்.

3. **சம்பளம்.**—இப்பதவிக்கான திரட்டிய வேதன அளவுத்திட்டமானது, வருடமொன்றுக்கு 360 ரூபாவாக 6 வருடாந்த வேதன உயர்வுகளையும், 480 ரூபாவாக 7 வருடாந்த உயர்வுகளையும் கொண்டு, ரூபா 8,880 இல் தொடங்கி ரூபா 14,400 வரை உயரும்.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்குத் திருப்திகரமான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) நற்குணமுடையவராயும், உடல் நலமுடையவராயுமிருத்தல் வேண்டும் ;

(ஆ) 1973.08.15 இல், 25 வயதிற்குக் குறையாதவராயும் 45 வயதிற்கு மேற்படாதவராயுமிருத்தல் வேண்டும். (அரசாங்க சேவையில் ஏற்கனவே உள்ளோர்க்கு மேல் வயதெல்லை ஏற்புடைத்தன்று) ;

(இ) (i) சிங்களத்தை ஒரு பாடமாகக் கொண்ட ஒரு அங்கீகரிக்கப் பெற்ற பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரியாக ;

**அல்லது**

(ii) ஆங்கிலச்சட்டவாக்கங்கள் முதலியவற்றைச் சிங்களத்திற்கு மொழிபெயர்ப்பதில் ஆகக் குறைந்தது பத்து வருட அனுபவத்தையோ கொண்டவராயிருத்தல் வேண்டும்.

5. பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படும்போது அபேட்சகர்கள் அவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கிய குறிப்பு.**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத்தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பல்கலைக்கழகப் பட்டம் அல்லது மிக உயர்ந்த கல்விச்சான்றிதழ் ;

(இ) குணச்சான்றிதழ் இரண்டு. இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமையையும்/அல்லது தொழில் நுட்பத் தகைமையையும் குறிக்கும் சான்றிதழ்கள்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு.**—(i) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்போது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையில் அல்லது யாக்கங்களிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவர்களின் திணைக்களங்களின் அல்லது யாக்கங்களின் தலைவர்களுக்கூடாக அனுப்பப்படுதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை நீதி அமைச்சின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அவ்வறிவித்தல் விண்ணப்பக் கடைசித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ செயலாளரை அடையத்தக்கதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

7. விண்ணப்பங்களும், அவைசம்பந்தமான வேறு கடிதத்தொடர்புகளும் செயலாளர், நீதி அமைச்சு என முகவரியிட்டனுப்பப்படவேண்டுமேயன்றி, இத்திணைக்களத்திலுள்ள எவ்வுத்தியோகத்தருக்காயினும் தனிப்பட்டமுறையில் அனுப்பப்படக்கூடாது.

8. இவ்வர்த்தமானியின், பகுதி I பிரிவு (IIஅ) இன் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுக்குக் கவனம் கோரப்படுகிறது.

நிஹால் ஜயவிக்ரம,
நீதி அமைச்சின் செயலாளர்.

நீதி அமைச்சு,
கொழும்பு 12,
1973 ம் ஆண்டு யூலை மீ 10 ந உ.

7–756—20.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 69

---

## தேசிய தொழிற் பயிற்சிச் சபை

### கணக்கு உதவியாளருக்கான வெற்றிடம்

மேற்கூறப்பட்ட வெற்றிடத்துக்குப் பின்வரும் தகைமைகளுடைய அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :—

(அ) கணக்கியல் தகுதித் தேர்வுப் பத்திரம், ஏ.சி.எம்.ஏ. (பகுதி I, II, III) அல்லது குறைந்தது 3 வருட தொழிலாற்றும் அறிவுகொண்ட இதை ஒத்த தகைமைகள் ; அல்லது கூட்டுத்தாபனங்களிலிருந்து அல்லது சபைகளிலிருந்து 10 வருடத்திற்கு மேல் சேவையாற்றிக் கணக்கு வேலைகள் செய்த உத்தியோகத்தர்கள் ;

(ஆ) சிங்களத்தில் மிகச் சிறந்த அறிவுடையவராக இருத்தல் ;

(இ) 35 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல், ஆனால் கூட்டுத்தாபன சபை ஊழியர்கள் இந்நிபந்தனையிலிருந்து தவிர்க்கப்படுவர்.

2. **இப்பதவிக்கான சம்பள அளவுத்திட்டம்.**—எல்லாம் உட்பட மாதமொன்றிற்கு ரூபா 550—25—850 ஆகும்.

3. **சேவை நிபந்தனைகள்.**—(i) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் பின்வரும் முறையில் வேண்டப்படுவர் ;

(அ) உடற்தகுதியைச் சோதிக்க வைக்கப்படும் வைத்தியப் பரிசோதனையில் சித்தியடைதல் ;

(ஆ) அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கிணங்க தகுதிகாண் நிலைக் காலத்திற்குள் சபையால் குறிப்பிடப்பட்ட தரத்திற்கு, அரசகரும மொழியில் தேர்ச்சி பெறுதல் ;

(இ) தனது சம்பளத்தின் 6 நூற்று வீதத்தை ஊழியர் சகாய நிதிக்குக் கொடுப்பனவு செய்தல். (சபையின் கொடுப்பனவு 9% மாகும்).

(ii) சித்தியடையும் அபேட்சகர் 3 வருட கால தகுதிகாண் நிலைமையில் அமர்த்தப்படுவர்.

4. விண்ணப்பங்கள் யாவும் 1973 ம் ஆண்டு ஆடி மாதம் 31 ஆம் திகதிக்குப் பிந்தாது கிடைக்கத்தக்கதாக அனுப்பப்படல் வேண்டும். கூட்டுத்தாபனங்களினதும் சபையினதும் ஊழியர்கள் விண்ணப்பங்களை அவரவர் நிறுவகங்களின் தலைவர்களுக்கூடாகப் பின்வரும் விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும் :—

உதவிப் பணிப்பாளர் (நிதி),
தேசிய தொழிற் பயிற்சிச் சபை,
30, விஜயராம மாவத்தை ;
கொழும்பு 7.

5. விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இவ்வறிவிப்பின் தேவைக்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

6. தேசிய தொழிற் பயிற்சிச்சபை, சபையின் நலனுக்கு அப்படிச் செய்வது தகுந்ததெனக் கருதுமிடத்து, எந்த அபேட்சகரையும் நியமிக்காதுவிடும் உரிமையைத் தனக்கே ஒதுக்கியுள்ளது.

தலைவர்,
தேசிய தொழிற் பயிற்சிச் சபை.

தேசிய தொழிற் பயிற்சிச் சபை,
30, விஜயராம மாவத்தை,
கொழும்பு 7.
1973 ம் ஆண்டு ஆடி மீ 3 ம் உ.

7–707—20.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 69

### சிறு ஏற்றுமதிப் பயிர்த் திணைக்களம்

நூல் ஆக்க நிபுணர் (இயற்கைப் பட்டுநூற் திட்டம்) பதவி

சிறு ஏற்றுமதிப் பயிர்த் திணைக்களத்தில் நூல் ஆக்க நிபுணர் (இயற்கைப் பட்டுநூற் திட்டம்) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலுக்குக் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் செயலாளர், தோட்டத் தொழிற்றுறைகள் அமைச்சு, த. பெ. இல. 1652, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு 1973 ம் ஆண்டு ஆகஸ்து மாதம் 15 ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

**குறிப்பு**

(i) கீழே காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) விண்ணப்பம் அல்லது அத்தகைய விண்ணப்பம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்களை அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனால் ஆகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்**

(i) பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பளத்திற்கு உரிமையற்றதுமாகும். அரசாங்க சேவை சேமலாப நிதிக்கு உதவுதொகை செலுத்தப்படவேண்டும். ஆரம்பகால சேவை மூன்று வருடங்களுக்கு தகுதிகாண் காலத்தைக் கொண்டதாகும்.

(ii) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் அரசாங்கத்தின் கீழ் 1972 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ந் திகதிக்கு முன்னர் நிரந்தரமானதும் உபகாரச் சம்பளத்திற்கு உரிமையுள்ள பதவியை வகித்தவராயும் இருந்தால் ஆரம்ப காலத்தில் ஒரு குறிக்கப்பட்ட காலத்திற்குப் பதில் கடமையாற்ற நியமிக்கப்படுவார்.

3. **சம்பளமும் ஏனைய படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பளத் திட்டம் பின்வருமாறு :—

திரட்டிய சம்பளம்.—ஆண்டொன்றுக்கு ரூபா 7,440 இல் ஆரம்பித்து ரூபா 360 ஐக் கொண்ட 10 ஆண்டுயர்ச்சிகளையும், ரூபா 480 ஐக் கொண்ட 11 ஆண்டுயர்ச்சிகளையும் கொண்டு ஆண்டொன்றிற்கு ரூபா 16,320 வரை அதிகரிக்கும். (ஆண்டொன்றிற்கு ரூபா 11,520 இலும் ஆண்டொன்றிற்கு ரூபா 14,880 இலும் வினைத் திறமைகாண் தடைகளுண்டு)

**குறிப்பு**

(i) விதிக்கப்பட்ட பின்னிலைப் பட்டத்தைப் பெற்றாலன்றி எந்த உத்தியோகத்தரும் வருடாந்தம் ரூபா 11,520 ற்கு மேல் சம்பளம் பெறுதற்கு உரித்துடையவரல்லர்.

(ii) மேற்குறித்த பின்னிலைப்பட்டத்தை அல்லது டிப்ளோமா உடைய அபேட்சகர் எவரும் சம்பளத் திட்டத்தில் வருடத்திற்கு ரூபா 8,520 சம்பள நிலையில் அமர்த்தப்படுவர்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**— ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்குத் திருப்திகரமான சான்று காட்டுதல் வேண்டும் :—

(i) (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் நெசவுத்தொழில் நுட்பத் தேர்ச்சிப் பட்டம் பெற்றவராயும் ; **அல்லது**

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் பௌதீகவியலில் முதலாம் அல்லது இரண்டாம்தரப் பட்டம் பெற்றவராயும் ; **அல்லது**

(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் பௌதீகத்தில் பின்நிலைப் பட்டதாரிப் பட்டம் பெற்றவராயும் ; **அல்லது**

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் பொறியியல் (எந்திரவியல்) பட்டம் பெற்றவராய் அல்லது எந்திரப் பொறியியல் நிறுவனத்தின் கூட்டுறுப்பினர் (ஏ. எம். ஐ. எம். இ.) சான்றிதழ் பெற்றவராயும் ;

(ii) விண்ணப்ப முடிவுத் தேதியன்று 22 வயதுக்குக் குறையாதவராகவும், 30 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும் ; பின்னிலைப்பட்டத் தகைமைபெற்ற விண்ணப்பதாரரின் மேல் வயதெல்லை 35 ஆகும். (அரசாங்க சேவையிலுள்ள அபேட்சகர்களுக்கு இந்த வயதெல்லைகள் ஏற்புடைத்தாகா.)

(iii) நல்லொழுக்கமும் உடலுறுதியும் உடையவராயுமிருத்தல் வேண்டும்.

5. பின்வரும் சாதனங்களில் ஏதாவது ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ கேட்கப்படும்பொழுது சமர்ப்பிக்கும்படி விண்ணப்பதாரர் வேண்டப்படுவர் :—

(அ) பிறப்புச் சான்றிதழ் (ஞானஸ்நானச் சான்றிதழ்களோ அல்லது உதவிபெறும் பாடசாலைகளுக்கான பிரமாணங்களின் நோக்கத்திற்கு அமைய வழங்கப்பெற்ற பிறப்புச் சான்றிதழ்களோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.)

(ஆ) பல்கலைக்கழகப் பட்டச் சான்றிதழ் அல்லது உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) இரு நற்சான்றிதழ்கள். இவற்றுள் ஒன்று பாடப்பணிப்பாளர் அல்லது கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) தொழிற் தகைமைகாண் சான்றிதழும் அல்லது தொழில்நுட்பத் தகைமை காண் சான்றிதழும்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த உயர் தகைமைச் சான்றிதழ்கள்.

**குறிப்பு**

(i) சாதனங்கள் எவையும் விண்ணப்பப் பத்திரத்துடன் அனுப்பப்படக் கூடாது.

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரரின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

6. அரசாங்க சேவையிலுள்ள அல்லது அரசாங்க யாக்கங்களில் உள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வத் தலைவர்களுக் கூடாக அனுப்பப்படுதல் வேண்டும்.

7. விண்ணப்பங்களோ அல்லது அவை சம்பந்தமாக கடிதத் தொடர்புகளோ தோட்டத் தொழில் துறைகள் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டுமேயொழிய இவ்வமைச்சில் உள்ள எந்த உத்தியோகத்தருக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்புதல் கூடாது.

8. இவ்வர்த்தமானியின் I ம் பகுதி (IIஅ) ம் தொகுதியிற் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்வையிடுக.

டொறிக் த சூஸா,
செயலாளர்,
தோட்டத் தொழிற்றுறைகள் அமைச்சு.

தோட்டத் தொழில் துறைகள் அமைச்சு,
த. பெ. இலக்கம் 1652,
6, சேர் பாரன் ஜயத்திலக்க மாவத்தை,
கொழும்பு 1,
1973 ம் ௵ யூலை ௴ 9 ந் உ.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

நூல் ஆக்க நிபுணர் (இயற்கைப் பட்டுநூற் திட்டம்) பதவிக்கான விண்ணப்பம்

### சிறு ஏற்றுமதிப் பயிர்த் திணைக்களம்

(இவ்விண்ணப்பப் படிவத்துடன் எந்தவொரு சாதனமும் இணைக்கப்படுதல் கூடாது.)

1. முழுப் பெயர் (உறுப்பெழுத்தில்) :————.
2. அஞ்சல் முகவரி :————.
(முகவரியில் ஏற்படும் மாற்றங்கள் உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும்)
3. (அ) பிறந்த திகதி :—
வருடம் :————. மாதம் :————. தேதி :————.
(ஆ) விண்ணப்ப முடிவுத் தேதியில் சரியான வயது :—
வருடங்கள் :————. மாதங்கள் :————. நாட்கள் :————.
4. வம்சாவழி காரணமாகவா அல்லது பதிவு காரணமாகவா இலங்கைப் பிரசையெனக் குறிப்பிடுக :————.
(பதிவு காரணமாக இலங்கைப் பிரசையெனின் விவரங்களைத் தருக)
5. பிறந்த இடம் :—
(அ) விண்ணப்பதாரர் :————.
(ஆ) விண்ணப்பதாரரின் தந்தை :————.
(இ) விண்ணப்பதாரரின தந்தை வழிப்பாட்டன் :————.
(ஈ) விண்ணப்பதாரரின் தந்தை வழிப்பூட்டன் :————.
6. திருமணமானவரா, தனியாளா, விதவையா அல்லது தாரமிழந்தவரா எனக் குறிப்பிடுக :————.
7. பின்வரும் பாடங்களில் சித்தியெய்திய ஆகக்கூடிய பரீட்சை :—
(i) சிங்களம் :————.
(ii) தமிழ் :————.
(iii) ஆங்கிலம் :————.
8. 12 வயதிலிருந்து நீர் கல்விபெற்ற பாடசாலைகள், கல்லூரிகள், ஏனைய நிறுவனங்கள் :

| பொதுக்கல்வி | | | உத்தியோகக் கல்வி | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | தொடக்கம் | வரை | கல்வித் தாபனம் | தொடக்கம் | வரை |
| 1. | | | 1. | | |
| 2. | | | 2. | | |
| 3. | | | 3. | | |

9. நீர் கடன தொல்லைகள் அற்றவரா ? இல்லையெனின், கடன் பொறுப்புகளின் தொகை என்ன :————.

10. சட்டநீதிமன்றத்தில் ஏதாவது குற்ற பாதகத்திற்குக் குற்றம் சாட்டப்பட்டுளளீரா ? அப்படியானுல் வழக்கு இலக்கத்தைக் குறிப்பிட்டு, தேதிகளோடு முழு விபரங்களையும் தருக :————.

11. பாடசாலைக் கலவி, உத்தியோகக் கலவி, நுண்தொழிற் கல்வித் தகைமைகள் :————.
(பல்கலைக்கழகத்துச் சகல பட்டங்கள், திறமைகள், உத்தியோகக் கல்வி/நுண்தொழிற் கல்வித் தகைமைகள்; விசேட வகுப்புப் பட்டங்களாயின அவற்றின் விபரங்கள், தோற்றிய பாடங்கள், நிறுவனங்களின் பெயர்கள் என்பவற்றைத் தேதிகளுடன் தருக.)

12. தற்போதைய தொழிலும், முன்னர் பதவிகளில் இருந்தால், அவற்றின் விபரங்களும் :—

| | பதவி | தொடக்கம்/வரை | ஆண்டுச் சம்பளம் ரூபா |
|---|---|---|---|
| (1) | | | |
| (2) | | | |
| (3) | | | |

(அரசாங்க ஊத்தியோகத்திலிருந்து நீங்கிய காரணம் கீழேயுள்ள 13 ஆம் நிரப்புப் பிரிவிற் குறிப்பிடப்படல் வேண்டும்.)

13. மேலும் வேறு விபரங்கள் :————.

14. உம்மைப்பற்றிய விபரங்களைப் பெறக்கூடிய உமக்கு அறிந்த இருவரின் பெயர்களையும் முகவரிகளையும் தருக :————

இந்த விண்ணப்பப் பத்திரத்தில் என்னுல் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானவையெனறும் சரியானவை என்றும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன். இதனுள் அடங்கியிருக்கும் விபரங்கள் எவையேனும் பொய்யானவை, அல்லது சரியற்றவையென்று தெரிவு செய்யப்படுமுன் அறிந்தால் தகுதியற்றவனுக்கப்படுவேனென்றும், நியமனம் பெற்றபின் சரியற்றவை என்று கண்டுபிடிக்கப்பட்டால் நட்டாடு எதுவுமின்றி பதவியால் நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

தேதி :————.

7–665 —20.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 69

---

இல. சுபோ/ஆய/2/17

**சிறு ஏற்றுமதிப்பயிர்கள் திணைக்களம்**

உதவிப் பண்ணை முகாமையாளர் பதவிகள்

சிறு ஏற்றுமதிப்பயிர்கள் திணைக்களத்திலுள்ள உதவிப் பண்ணை முகாமையாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதன் கீழ் தரப்பட்டுள்ள மாதிரிப்படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு அதிபதி, சிறு ஏற்றுமதிப் பயிர்கள் திணைக்களம், 159, தர்மபால மாவத்தை, த. பெ. இல. 1524, கொழும்பு 7 என்னும் முகவரிக்கு 1973 ம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ந் திகதியிலன்ரே அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக பதிவஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் இவ்வலுவலகத்தால் வழங்கப்பட மாட்டா. விண்ணப்பம் அனுப்பும் தபால் உறையின் மேல் இடது பக்கத்தில் " உதவிப் பண்ணை முகாமையாளர் பதவி " எனக் குறிப்பிடப் பட வேண்டும்.

**2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்**

(i) இப் பதவிகள் நிரந்தரமானவையும் இளைப்பாற்றுச் சம்பள மற்றவையுமாகும். உதவு தொகைகள் அரசாங்கச் சேவைச் சகாய நிதிக்குச்செலுத்தப்படல் வேண்டும். இந்நியமனங்கள், முதலில் மூன்றுண்டு காலத் தகுதிக்காண நிலையிலிருக்கும்.

(ii) நியமனம் பெறுவோர் இத்திணைக்களத்தின் வெளிக்கரும அலுவலராகுவாராகையால் பொது விடுமுறை, நோன்மதி நாட்களை ஓய்வு நாட்களாக எடுத்துக்கொள்ளத் தக்கவராகார். எனினும் அவர்கள் நிலையத்தில் இல்லாதிருக்கும் போது வேலையைச் செவ்வனே நிறைவேற்றத்தக்க ஒழுங்குகள் செய்யப்படுமிடத்து எந்நாளினையும் எந்நேரத்தையும் ஓய்வுக்காக எடுத்துக் கொள்ளலாம்.

(iii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர் நியமனம் மூன்று ஆண்டுகளுள் சிங்கள மொழித் தேர்ச்சி பெற்று சிங்கள மொழித் தேர்ச்சிப் பரீட்சைகளில் சித்தியடைதலும் வேண்டும். முதலாம் ஆண்டிலே தமிழ் மொழியில வேலை செய்யும் அறிவும் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

**3. சம்பளமும் படிகளும்.**—இப் பதவிகளுக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—

திரட்டிய சம்பளம்—ஆண்டொன்றுக்கு ரூபா 3,864—19 × 144—4 × 180 —ரூபா 7,320. (ஆண்டொன்றுக்கு ரூபா 4,584 லும் ஆண்டொன்றுக்கு ரூபா 6,024 லும் வினைத்திறமைகாண் தடைகளுள.)

**குறிப்பு.**—(1) நன்கு மதிக்கப்படும் ஒரு பல்கலைக்கழகத்தின் விவசாய விஞ்ஞான பட்டதாரிகளும் பேராதனை அல்லது குண்டசாலை விவசாயப் பாடசாலையின் சிரேட்ட தராதரபத்திரம் முதலாம் அல்லது இரண்டாம் பிரிவுச்சித்தியுடன் உள்ளோர்களும் தெரிவு செய்யப்படுவராயின் அன்னவர் மேற்படி சம்பள திட்டத்திலே ஆரம்பச் சம்பளமான ரூபா 3,864 பெற்றுக்கொள்வர். அவர்கள் நியமனம் பெற்றதிலிருந்து ஓர் ஆண்டுக்குள் இத்திணைக்களத்தால் நடாத்தப்படும் சிங்களம்/தமிழ் மூல வாய்மொழிப் பரீட்சையிற் சித்திபெறுதல் வேண்டும். விதிக்கப்பட்ட காலவெல்லைச்குள் இப் பரீட்சையிற் சித்தி பெற தவறுமிடத்து அடுத்த சம்பளவேற்றம் பின் போடப்படும்.

(2) பேராதனை அல்லது குண்டசாலை விவசாயப் பாடசாலையின் சிரேட்ட தராதரப் பத்திரம் சாதாரண சித்தியுடன் பெற்றுள்ளோர் அல்லது குறிப்பிடப்பட்ட பாடங்களையுடைய கல்விப் பொதுத்தராதரப் (உயர்தரம்) பத்திரத்தையும், பண்ணை முகாமையாளராக மூன்று வருட அனுபவத்தையும் பெற்றுள்ளோர் தெரிவு செய்யப்படுமிடத்து அன்னவர் இத்திணைக்களத்தால் நடத்தப்படும் தகுதிகாண் நிலைப் பரீட்சையிலே முதலாம் பாகப் பரீட்சையிற் சித்தியடையும்வரை ஆண்டொன்றுக்கு ரூபா 3,180 யில் மட்டும் அமர்த்தப்படுவர். மேற்படிப் பரீட்சையிற் சித்திபெற்ற பின்னர் ஆண்டொன்றுக்கு ரூபா 3,864 ஆன மேற்படி சம்பள திட்டத்தின் துவக்கச் சம்பளத்தைப் பெற தகுதியுடையோர் ஆவர். அவர்களும் நியமனத்திலிருந்து ஓராண்டுக் காலத்துள் சிங்களம்/தமிழ் மூல வாய்மொழிப் பரீட்சையிற் சித்தி பெறுதல் வேண்டும். விதிக்கப்பட்ட காலத்துள் சித்தி பெறத் தவறின் அடுத்த சம்பள வேற்றம் பின் போடப்படும். இத்திணைக்களத்தின் தகுதிகாண் நிலையினேர்க்கான பரீட்சையின் முதலாம் பாகத்தில் ஓர் ஆண்டுக்குள் சித்தி பெறத் தவறுவோர் ஆண்டொன்றுக்கு ரூபா 3,864 ஆன சம்பளத்தைப் பெற்றுக்கொள்ள முன்னர் சிங்களம்/தமிழ் மூல வாய்மொழிப் பரீட்சையிலும் சித்தி பெறுதல் வேண்டும்.

**4. தேவையான தகைமைகள்.**— ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பின்வருவனவற்றில் அவர்—

(அ) i. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் விவசாயப் பட்டதாரி என்றும் அல்லது

ii. சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரத்தை அல்லது சிங்கள அல்லது தமிழ் மொழியில் ஒரே தடவையில் ஐந்து பாடங்களில் எண கணிதத்துடன் அல்லது கணிதத்துடன் இன்னும் நான்கு பாடங்களில் சித்தி பெற்றுக் கிடைக்கப்பெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) த்தை அல்லது அதற்கு சமானமான அல்லது உயர்வான பரீட்சை தராதரப் பத்திரத்தை உடையவரென்றும், **அத்துடன்**

விவசாயப் பாடசாலையின் சிரேட்ட தராதரப் பத்திரத்தையுடையவரென்றும், **அல்லது**

iii. ஒரே தடவையில் இரசாயனவியலும், தாவரவியலும் அடங்க மூன்று விஞ்ஞான பாடங்களில் சித்தி பெற்றுக் கிடைக்கப் பெற்ற கல்விப் பொதுத்தராதரப் பத்திரம் (உயர்தரம்) உடையவரென்றும், **அத்துடன்**

பண்ணை முகாமையாளராக மூன்று வருட அனுபவமுடையவரென்றும்,

(ஆ) விண்ணப்ப முடிவு திகதியிலன்று 22 வயதுக்குக் குறையாதவரென்றும் 35 வயதுக்கு மேற்படாதவரென்றும், (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரருக்கு இவ் வயதெல்லையும் ஏற்புடையதாகா).

(இ) சிறந்த நற்குணமுடையவரென்றும் உடல் நலமுடையவரென்றும், திருப்திகரமான சான்று காட்டுதல் வேண்டும்.

5. விண்ணப்பக்காரர் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலப் பிரதிகள் அல்ல) தமது விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (மு. கு.—ஞானஸ்தானப் பத்திரம் அல்லது உதவி பெறும் பாடசாலைகளுக்கான பிரமாணத் தொகுப்பு நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது).

(ஆ) மிக உயர்ந்த கல்விச் சான்றிதழும் உயர் தொழிற் கல்விச் சான்றிதழும் அல்லது உயர் தொழிற்றகமைச் சான்றிதழ்.

(இ) சிங்கள மொழியிற் சித்தியெய்திய உயர் பரீட்சைச் சான்றிதழ்.

(ஈ) பண்ணை முகாமையாளரான அனுபவச் சான்றிதழ் (இஃது பொருத்தமாயின்).

(உ) சமீப காலத்திற் பெற்ற குணச் சான்றிதழ்கள் இரண்டு (அரசாங்க சேவையிலிருந்து கொண்டு விண்ணப்பிப்போர் விடயத்தில் குணச்சான்றிதழ்கள் அணைக்கப்பட வேண்டியதில்லை).

**குறிப்பு.**—மேலே கேட்கப்படும் சான்றிதழ்களினதோ நற்சாட்சிப் பத்திரங்களினதோ பிரதிகள் திருப்பி அனுப்பப்பட மாட்டா.

6. அரசாங்க சேவையிலிருக்கும் விண்ணப்பக்காரர் உரிய திணைக்களத் தலைவருக்கு ஊடாகவே அவர் தம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பட்ட கால எல்லைக்குப் பிந்தி இக் காரியாலயத்திற்கு வந்து சேரும் விண்ணப்பங்கள் விதிக்கப்பட்ட காலத்துக்குள் உரிய திணைக்களத் தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு **அவற்றைப் பிந்தி அனுப்புவதற்குரிய காரணங்களைக் காட்டி ஏற்றுக்கொள்ளுமாறு விதந்துரைக்கப்படாவிடின்** ஏற்றுக்கொள்ளப்படா.

7. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான வேறெந்தக் கடிதத் தொடர்புகளும் அதிபதி, சிறு ஏற்றுமதிப் பயிர்கள் திணைக்களம், 159, தர்மபால மாவத்தை, த. பெ. இல. 1524, கொழும்பு 7 என்னும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டுமே யொழிய இத்திணைக்களத்திலுள்ள எந்த அலுவலரதும் சொந்த பெயரிட்டு அனுப்பப்படலாகாது.

8. இந்த வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி I தொகுதி (IIஅ) இன் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பகுதி நியமனங்களுக்கு பொருத்தமான பொது நிபந்தனைகளும் இவ் விளம்பரத்துக்கும் பொருந்தும்.

9. விண்ணப்பங்கள் கிடைத்தமை அறிவிக்கப்படமாட்டாது.

கலாநிதி ஈ. ஜயனெத்தி,
அதிபதி,
சிறு ஏற்றுமதிப்பயிர்கள் திணைக்களம்.

சிறு ஏற்றுமதிப் பயிர்கள் திணைக்களம்,
159, தர்மபால மாவத்தை,
த. பெ. இல. 1524,
கொழும்பு 7,
1973 ம் ஞூ யூலை மீ 07 ந உ.

### விண்ணப்ப மாதிரிப் படிவம்

சிறு ஏற்றுமதிப் பயிர்கள் திணைக்களத்தில் உதவிப் பண்ணை முகாமையாளர் பதவி

1. முழுப் பெயர் : ————.
   (அ) முதற் பெயர் ; ————.
   (ஆ) பிற பெயர்கள் : ————.
2. விலாசம் : ————.
3. பிறப்புத் தேதியும் 15.8.73 ல் சரியான வயதும் : ————.
   (பிறப்புப் பதிவுச் சான்றிதழ் பிரதி அணைக்குக்)
4. நாட்டினமும் பெறப்பட்ட விதமும் : ————.
5. பிறப்பிடம் : —
   (அ) விண்ணப்பக்காரர் : ————.
   (ஆ) தந்தை : ————.
   (இ) தந்தை வழிப் பாட்டன் : ————.
   (ஈ) தந்தை வழிப் பூட்டன் : ————.
6. (அ) ஆண்/பெண் : ————.
   (ஆ) திருமணமானவரா ? தனியானவரா ? விதவையா ? வாழ் விழந்தவரா ? : ————.
7. கல்வி/தொழிற்றகைமைகள் : ————.
   (பிரதிகள் அணைக்குக)
8. சிங்கள மொழித் தேர்ச்சி : ————
   (சான்றிதழ் அணைக்குக)
9. அரசாங்க சேவை முன்னர் உண்டா ? உண்டானால், எப்பதவி ? ————. விலகுவதற்குரிய காரணம் யாது ? : ————
10. சிறப்புத்தகைமைகள், அனுபவம் கோரிக்கைகள் : ————.
11. குணச்சான்றிதழ்கள் வழங்கியவர்களின் பெயரும், பதவியும் : ———
    (குணச்சான்றிதழ்களின் பிரதிகள் அணைக்குக)
12. பிற விபரங்கள் :————.

இவ் விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என்றும் சரியானவையென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதனுள் அடங்கியுள்ள விபரங்கள் பொய்யானவை அல்லது பிழையானவையெனத் தெரிவு செய்யப்படு முன்னர் கண்டு பிடிக்கப்படுமிடத்து தகைமை நீக்கம் செய்யப்படுதற்கும் நியமனத்திற்குப் பின்னர் கண்டு பிடிக்கப்படுமிடத்து நட்ட ஈடு எதுவுமின்றி பதவி நீக்கம் செய்யப்படுதற்கும் ஆளாவேன் என்பதனை நான் அறிவேன்.

————.
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : ————.

7-664—20.07.73ந் திகதிய வர்த்தமானி இல. 69

---

## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### ஆசுபத்திரி எழுதுவினைஞர் சேவையின் II ஆம் வகுப்பின் " அ " பிரிவுக்கு நியமிப்பதற்கான பரீட்சை—நவம்பர், 1972

ஆசுப்பத்திரி எழுதுவினைஞர் சேவையின் புதிய அமைப்பினை நிறைவேற்றுதல் தொடர்பான 24.3.72 ஆம் திகதியிட்ட ப. கூ. சுற்றறிக்கை இல. 813 இன் நியதிகளுக்கமைய, 25.11.1972 இல் நடைபெற்ற பரீட்சையின் முடிவுகளின்படி பின்வரும் வேட்பாளர்கள் திறமைக் கிரமத்தின்படி 25.11.1972 தொடக்கம் ஆசுப்பத்திரி எழுதுவினைஞர் சேவையின் II ஆம் வகுப்பின் " அ " பிரிவுக்கு நியமிக்கப்படுதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

| இல. | பெயர் | பணிபுரியுமிடம் |
|---|---|---|
| 1. | திரு. ஜயதிலக, யு. டி. | பெரிய ஆசுப்பத்திரி, கண்டி |
| 2. | செல்வி சேனநாயக்க, எம். கே. | மாதருக்கான டி சொய்சா ஆசுப்பத்திரி, கொழும்பு |
| 3. | திரு. லயனல், என். ஈ. | கண்காணிப்பாளர் அலுவலகம், கொழும்பு ஆசுப்பத்திரிகள் குழு, கொழும் |
| 4. | திரு. பிரேமரத்ன, எச். பி. | கொழும்பு தெற்கு ஆசுப்பத்திரி, களுபோவில |
| 5. | திரு. வியனகே, எச். ஏ. | பெரிய ஆசுப்பத்திரி, கொழும்பு |
| 6. | திரு. குருப்பு, டி. ஜே. | முல்லேரியாவை மனநோய் ஆசுப்பத்திரி, அங்கொட |
| 7. | திரு. பெர்னந்து, டபிள்யு. பி. ஜே. | மனநோய் ஆசுப்பத்திரி, அங்கொட |
| 8. | திரு. நாமசேன, யு. டி. | சுகாதார சேவைக் கண்காணிப்பாளர் அலுவலகம், கேகாலை |
| 9. | திரு. பிரேமதாச, எச். கே. எம். | காசநோய் தடுப்பு இயக்க அலுவலகம், கொழும்பு |
| 10. | திரு. பெரேரா, எம். பி. | மருத்துவ ஆய்வு நிறுவகம், கொழும்பு—8. |
| 11. | திரு. பெரேரா, எம். ஜே. | பெரிய ஆசுப்பத்திரி, கண்டி |
| 12. | திரு. அபயரத்தின பண்டார, ஏ. ஆர். | மாவட்ட ஆசுபத்திரி, தெல்தெனிய |
| 13. | திரு. விக்கிரமரத்ன, எம். | கண்காணிப்பாளர் அலுவலகம், கொழும்பு ஆசுப்பத்திரிகள் குழு, கொழும்பு |
| 14. | திரு. கருணாரத்ன, ரி. | பெரிய ஆசுப்பத்திரி, கண்டி |
| 15. | திரு. ரத்னபால, எச். எவ். | கண்காணிப்பாளர் அலுவலகம், கொழும்பு ஆசுபத்திரிகள் குழு, கொழும்பு |
| 16. | திரு. பிரேமதாச, ஜே. ஏ. | அரசாங்க ஆசுபத்திரி, மாத்தறை |
| 17. | திரு. சோமதாச, எஸ். கே. யு. | பெரிய ஆசுப்பத்திரி, கொழும்பு |

ஜி. அமரசேன,
பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்),
சுகாதார சேவைப் பணிப்பாளருக்காக.

சு. சே. பணிப்பாளரின் அலுவலகம்,
கொழும்பு,
1973 ம் ஞூ ஜூலை மீ 9 ந உ.

7-652—20.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 69

### கல்வி அமைச்சு

#### 1974 ஆம் ஆண்டில் அரசினர் பாடசாலைகளின் 1 ஆந் தரத்தில் பிள்ளைகளைச் சேர்த்தல்

1974 ஜனவரி மாதத்தில் அரசினர் பாடசாலைகளின் 1 ஆந் தரத்திற்கு அனுமதிக்கப்பெறும் பிள்ளைகள் 1974 ஜனவரி 31 ஆந் தேதியன்று 6 வயதினைப் பூர்த்தி செய்பவர்களாய இருக்கவேண்டும். அதாவது 1968.01.31 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் பிறந்தோராய் இருத்தல் வேண்டும்.

2. இந்தத் தரத்திற் சேர்ப்பதற்கான பிரவேசப் பரீட்சையொன்றும் நடைபெறமாட்டாது.

3. பெற்றோரின் வதிவிடத்திற்கும் பாடசாலைக்குமுள்ள அண்மையின் அடிப்படையிலேயே பிள்ளைகள் தெரிவுசெய்யப்பெறுவர்.

4. பின்வரும் மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்பெற்ற விண்ணப்பங்கள், பெற்றோர் வதியும் இடத்திற்கு மிகக் கிட்டியதும் 1 ஆந் தர வகுப்பு உள்ளதுமான அரசினர் பாடசாலைத் தலைவருக்கு 1973.08.31 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் பத்திரத்தை நேர்முகமாகக் கையளித்தால் அதனைப் பெற்றுக்கொண்டமையை நிரூபிக்கும் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

5. கொழும்பு ஆனந்த கல்லூரியிலும் கொழும்பு விசாக வித்தியாலயத்திலும் 1 ஆந் தரத்துக்கு பிள்ளைகளை அனுமதித்தல் ஏலவே நிற்பாட்டப்பட்டுள்ளது. 1974 ஆம் ஆண்டு கொழும்புப் பிரதேசத்திலுள்ள கீழ்க்காணும் பாடசாலைகளில் பிள்ளைகள் 1 ஆந் தரத்துக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

நாலந்த வித்தியாலயம், கொழும்பு கோத்தமி மகளிர் வித்தியாலயம், கொழும்பு ஆனந்த மகளிர் வித்தியாலயம், கொழும்பு வேல்ஸ் இளவரசர் வித்தியாலயம், மொறட்டுவ வேல்ஸ் இளவரசி வித்தியாலயம், மொறட்டுவ; மொறட்டுவ வித்தியாலயம், மொறட்டுவ.

பி. உடகம,
கல்வி அமைச்சின் செயலாளரும்,
கல்வி மா அதிபரும்.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு–2,
1973 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10 ந் திகதி.

#### மாதிரி விண்ணப்பப் படிவம்

1974 ஆம் ஆண்டு ..................................................
பாடசாலையின் 1 ஆந் தரத்திற் சேர அனுமதிகோரும் விண்ணப்பப் பத்திரம்

பிள்ளை பற்றிய விபரங்கள் :

1. முழுப் பெயர் :————.

2. ஆணா, பெண்ணா என்பது :————.

3. போதனா மொழி :————.

4. (i) பிறந்த தேதி :————.

(ii) 1974 ஜனவரி 31 ஆந் தேதியன்றுள்ளபடி வயது :—

வருடம் :———. மாதம் :———. நாள் :———.

பெற்றோர் பற்றிய விபரங்கள்

| | தாய் | தகப்பன் / சட்டமுறையான பாதுகாவலர் |
|---|---|---|
| 5. முழுப் பெயர் : | | |
| 6. (அ) பிரஜா விபரம் : | | |
| (ஆ) சாகியம் : | | |
| 7. சமயம் : | | |
| 8. வதிவிடம் : | | |
| முகவரி : | | |
| வீட்டிலக்கம் : | | |
| வீதி : | | |
| நகரம் : | | |
| கிராமசேவையாளர் பிரிவு | | |
| 9. வதிவிடத்திற்கும் பாடசாலைக்கும் உள்ள மிகக் கிட்டிய தூரம் (சங்கிலியிற்றருக) : | | |
| 10. மேலே குறிப்பிட்ட வதிவிடத்திற் குடியேறிய திகதி : | | |
| 11. 10 ஆம் கூட்டில் குறிப்பிட்ட தேதியின் முன்னர் வதிந்த இடத்தின் முகவரி : | | |
| 12. நீவிர் பிரதான குடியிருப்பாளரா ? : | | |
| 13. நீர் பிரதான குடியிருப்பாளராக இல்லாவிடின், உமக்கும் பிரதான குடியிருப்பாளருக்குமுள்ள உறவு : | | |

எனது பிள்ளை எந்த அரசினர் பாடசாலைக்கோ, தனிப்பட்ட பாடசாலைக்கோ அல்லது அனுமதிக்கப்பட்ட பாடசாலைக்கோ தற்சமயம் படிக்கச் சென்றுகொண்டிருக்கவில்லையென்றும், அத்தகைய எந்தப் பாடசாலைக்கும் இதற்கு முன்னர் செல்லவில்லையென்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். மேற்போந்த விபரங்கள் சரியானவையென உறுதிப்படுத்துவதுடன் மேலே தந்த முகவரியில் யான் வதிகின்றேன என்பதற்கான போதிய அத்தாட்சிகளைச் சமர்ப்பிக்கவும் உடன்படுகின்றேன். மேலும் நான் தந்துள்ள விபரம் எதுவாயினும் தப்பானது என வெளியாயின் எனது பிள்ளையைப் பாடசாலையிலிருந்து விலக்கி திணைக்களம் குறிப்பிடும் பிரதேசமொன்றில் உள்ள வேறு பாடசாலையில் பிள்ளையைச் சேர்ப்பதற்கும் உடன்படுகின்றேன்.

————,
தாயின், தகப்பனின் / பாதுகாவலரின்
கையொப்பம்.

தேதி :————.

7–647—20.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 69

---

### கல்வி அமைச்சு

#### ஆசிரியர்களாகப் பயிற்சி அளித்தற்கான தெரிவு—பொதுப் பயிற்சி நெறி (தமிழ் மொழி மூலம்) 1974 ஆம் ஆண்டு

1. (i) தமிழ் மொழிமூல ஆசிரியர்களுக்கான பொதுப் பயிற்சி நெறி நிலையப் பயிற்சி நெறியாகவும் இரு வருடகால அளவினதாகவும் அமையும். ஆரம்பப் பாடசாலைகளில் 1 ஆந் தரத்திலிருந்து 5 ஆந் தரம் வரை சகல பாடங்களையும் படிப்பித்தற்கு வேண்டிய ஆற்றலுடைய ஆசிரியர்களைத் தோற்றுவித்தலே இப்பயிற்சி நெறியின் நோக்கமாகும்.

(ii) பொது ஒழுக்கத்திலும் கல்வி ஊக்கத்திலும் ஆசிரியர் கலாசாலை அதிபருக்குத் திருப்தி அளிக்கத் தவறும் பயிற்சியாளர் ஒருவர் பயிற்சி நெறியிலிருந்து விலக்கப்படுவார். இவைபற்றி மகா வித்தியாதிபதியின் முடிபு இறுதியானதாகும்.

(iii) பயிற்சிநெறிக் காலத்தில் பயிற்சியாளர் ஒருவர் வேறு யாதேனும் வெளிப் பயிற்சிநெறி ஒன்றினைப் பின்பற்றுதற்கேனும் வெளிப் பரீட்சை ஒன்றிற்குத் தோற்றுதற்கேனும் சாதாரணமாக அனுமதிக்கப்படமாட்டார்.

(iv) மாவட்டச் சேவைத் திட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் பயிற்சிக் காலம் முடிந்தபின் அவர்கள் நியமனம் பெற்ற அதே மாவட்டத்திலேயே சேவை புரிவதற்குக் கடமைப்பாடுடையவர்.

2. **சேர்வு முறை.**—(i) பின்வரும் பகுதிக்ளிலடங்கும் பரீட்சார்த்திகள் இப்பயிற்சி நெறிக்குச் சேர்க்கப்பட மாட்டார்கள். அத்தகைய பரீட்சார்த்திகள் அனுமதி பெறுமிடத்து, பயிற்சிக் காலத்தில் எந்நேரத்திலேனும் பயிற்சிக் கால முடிவிலேனும் அவரது அனுமதி செல்லுபடியற்றதாக்கப்படும்.—

(அ) ஆசிரியர் கலாசாலை ஒன்றில் ஏற்கனவே யாதேனும் பயிற்சி பெற்றுள்ளவர்கள் அல்லது தற்போது பயிற்சி பெறுபவர்கள் ;

(ஆ) பட்டம் பெற்றுள்ள ஆசிரியர்கள் ;

(இ) கீழ்க்காணும் 5 ஆம் பந்தியில் விதிக்கப்பட்டுள்ள தகவுத்திறன் நிபந்தனைகளை, விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான கடைசித் திகதியன்று அல்லது அதற்குமுன் திருப்தி செய்யாதவர்கள் ;

(ii) நிலையப் பயிற்சியைப் பொறுத்தவரையில், பயிற்சிக் காலத்தில் அவர் பெறக்கூடிய சம்பளம், சகாயப்படிகள், பயிற்சிக்கான செலவு ஆகியவற்றின் மொத்தத் தொகைக்குச் சமமான பெறுமதிக்கு ஓர் உடன்படிக்கையைச் செய்துகொள்வதற்கு வேண்டிய சாதனங்களை, அனுமதிக்கப்படும் இரு வார காலத்துக்குள் உரிய ஆசிரியர் கலாசாலை அதிபரிடம் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் சமர்ப்பிக்க வேண்டும். மேலும்,

(அ) பயிற்சிக் காலத்தில் அரசியல் சம்பந்தமான முயற்சிகளில் ஈடுபடமாட்டாரெனவும்,

(ஆ) எக்காரணத்தையிட்டும் பயிற்சி நெறியைக் கைவிடமாட்டாரெனவும்,

(இ) பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின், மகா வித்தியாதிபதியால் நியமிக்கப்படும் பாடசாலைகளில் தொடர்ச்சியாக 8 வருட காலத்துக்குச் சேவைபுரிவாரெனவும் (அரசினரல்லாத பாடசாலை ஆசிரியர்கள் அதே முகாமையின் கீழுள்ள பாடசாலைகளில் இதே முறையில் 8 வருட காலத்துக்குச் சேவை புரிவதாக முகாமையாளருடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும்) ;

(ஈ) திணைக்களத்துக்கு வெளியே எழும் எப்பதவிக்கும், உடன்படிக்கையில் குறிப்பிடப்படும் சேவைக் காலத்தையும் கடமைப்பாடுகளையும் முற்றுகப் பூர்த்தி செய்யும்வரை படிப்பு லீவாக மேலதிக காலத்துக்கும் விண்ணப்பிக்கமாட்டாரெனவும், குறித்த உடன்படிக்கை மூலம் உறுதி அளிக்க வேண்டும்.

3. **சம்பளம்.**—பயிற்சி நெறியைத் திருப்திகரமாகப் பூர்த்திசெய்த ஆசிரியர்களாக நியமனம் பெறும் பயிற்சியாளர்கள், புதிய நியமனத் திகதியன்று அவர்களுக்கு அமையும் சம்பள அளவுத் திட்டத்தில் அமர்த்தப்படுவார்கள்.

4. தமிழ்மொழி, எண்கணிதம்/வாணிக எண்கணிதம்/கணிதம் ஆகிய பாடங்களுட்பட சி. பா. த. பத்திரப் பரீட்சையில் அல்லது குறித்த பாடங்கள் உட்பட 6 பாடங்களில் க. பொ. த. (சா. தர)ப் பத்திரப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி சித்தி அடைந்திருந்தாலன்றி எவ்வபேட்சகரும் தமிழ் மொழிமூலம் நடத்தப்படும் ஒரு பயிற்சி நெறிக்கு அனுமதிக்கப்படுதற்கு உரித்துடையராகார்.

5. **தகவுத்திறன்.**—பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க்காணும் தேவைகளைத் திருப்தி செய்யவேண்டும் :—

(i) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான கடைசித் திகதிக்கு முன்னர் ஆசிரியராக நியமனம் பெற்றிருக்க வேண்டும். எனினும், அரசினர் ஆசிரியர்களிடையான தெரிவு சேவை முதுமை அடிப்படையிலே நடைபெறும் ;

(ii) 1974.01.01 அன்று 45 வயதுக்குக் குறைந்தவராய் இருக்க வேண்டும்.

6. 5 (1) ஆம் பந்தியின் நோக்கத்தின் பொருட்டு, இத்தெரிவுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதியன்று ஓர் அரசினர் அல்லது வித்தியாதிபதியின் முகாமையிலுள்ள பாடசாலையில் பணிபுரியும் ஆசிரியர்கள் ஆசிரியர்களாகக் கருதப்படுவார்கள். அங்கீகரிக்கப்பட்ட தனிப்பட்ட பாடசாலை ஒன்றில் நிரந்தர பணியாளர்களுள் அடங்குபவரும் வழமையான வகுப்புகளில் வாராந்தம் 20 மணித்தியால வேலை செய்பவருமான ஆசிரியர்களும் ஆசிரியர்களாகக் கருதப்படுவார்கள். இந்நோக்கத்தின் பொருட்டு பின்வருவன அங்கீகரிக்கப்பட்ட தனிப்பட்ட பாடசாலைகளாகக் கருதப்படும்.

(அ) கட்டணம் அறவிடும் பாடசாலைகளாக 1951 ஆம் ஆண்டு மாறிய உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் ;

(ஆ) கட்டணம் அறவிடாத தனிப்பட்ட பாடசாலைகளாக 1960.12.01 அன்று மாறிய I ஆந் தர, II ஆந் தர பாடசாலைகள் ; இவ்வகுதிகளில் அடங்கும் ஆசிரியர்கள், பயிற்சிக் காலத்தில் தமக்குச் சம்பளம் அல்லது சகாயப்படி பாடசாலை முகாமையாளரால் வழங்கப்படுமெனவும் பயிற்சியின் பின் அதே முகாமையின் கீழ் திரும்பவும் வேலைக்கு அமர்த்தப்படுவார்களெனவும் சாதன மூல சான்றை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும். பயிற்சிக் காலத்தைப் பூர்த்தி செய்த பின் அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதை அவர்கள் எதிர்பார்க்கலாகாது ;

(இ) கல்வி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தனிப்பட்ட பாடசாலைகளும் தோட்டப் பாடசாலைகளும்.

**குறிப்பு :** மேலுள்ள (இ) ஆம் வகுதியில் அடங்கும் தனிப்பட்ட பாடசாலை ஆசிரியர்களும் தோட்டப் பாடசாலை ஆசிரியர்களும் 10 வருட தொடர்ச்சியான சேவையைப் பூர்த்தி செய்திருப்பதுடன் வாராந்தம் 20 மணித்தியாலங்களுக்குக் குறையாது கற்பித்திருக்க வேண்டும். இவ்வகுதிகளில் அடங்கும் ஆசிரியர்கள், பயிற்சிக் காலத்தில் தமக்குச் சம்பளம் அல்லது சகாயப்படி பாடசாலை முகாமையாளரால் வழங்கப்படுமெனவும் பயிற்சியின் பின் அதே முகாமையின் கீழ் திரும்பவும் வேலைக்கு அமர்த்தப்படுவார்களெனவும் சாதனமூலச் சான்றை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்க வேண்டும். பயிற்சிக் காலத்தைப் பூர்த்திசெய்த பின் அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதை அவர்கள் எதிர்பார்க்கலாகாது.

7. தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் சிங்கள உதவி ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கெனப் புறம்பான ஒரு பயிற்சிநெறி நடைபெறும். இவ்வகுதியின் கீழ் அனுமதிகோரி விண்ணப்பிப்பவர்கள், விண்ணப்பத்தின் வலதுபக்க மேல்மூலையில் **"தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் சிங்கள உதவி ஆசிரியர்களாக நியமனம்"** எனத் தெளிவாக அடையாளமிடப்பட வேண்டும்.

8. **தெரிவுக்கான விண்ணப்பம்.**—இவ்வறிவித்தலில் காணப்படும் மாதிரிப் படிவத்துக்கமைய விண்ணப்பப் படிவம் ஒன்று பரீட்சார்த்தியால் தயாரிக்கப்பட்டு, பூரணப்படுத்தப்பட்டு விண்ணப்பஞ் செய்யப்படவேண்டும். தமிழ் மொழிமூலமே விண்ணப்பம் செய்யப்பட வேண்டும். அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவம் எதுவும் இவ்வமைச்சினுல் வழங்கப்படமாட்டாது. விண்ணப்பம் தயாரிக்கும்போது பின்வரும் தேவைகள் கண்டிப்பாகக் கவனிக்கப்பட வேண்டும். இவற்றைக் கவனிக்கத் தவறின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட வேண்டி நேரிடக்கூடும்.

(அ) விண்ணப்பப் படிவம் 13" × 16" அளவு முழுத்தாளில் தயாரிக்கப்பட வேண்டும் ; வேறு எவ்வித கடுதாசியிலும் அல்ல ;

(ஆ) படிவம் தட்டெழுத்துப் பிரதியாக அமையலாம். படிவம் கையால் தயாரிக்கப்படின் கோடுகள் யாவும் சிவத்த மையினும் பதிவுகள் யாவும் நீல அல்லது கறுத்த மையிலும் அமைய வேண்டும் ;

(இ) கூடுகள் யாவும் மாதிரிப் படிவத்திலுள்ள ஒழுங்கின் பிரகாரம் உரிய பக்கத்தில் வரையப்பட வேண்டும். எக்கூடும் மாற்றியமைக்கப்படவேனும் விடப்படவேனும் ஆகாது. கூடுகளை விவேகமான முறையில் இடைவெளிப்படுத்துவதுடன், அவை மிகநெருக்கமாக அமைதல் தவிர்க்கப்பட வேண்டும் ;

(ii) விண்ணப்பப் படிவம் பூரணமாகவும் செம்மையாகவும் பரீட்சார்த்தியால் நிரப்பப்பட வேண்டும். பூரணமாகத் தயாரிக்கப்படாத விண்ணப்பம் ஒன்று அங்கு கொடுபட்டுள்ள விபரங்களின் சிறப்புக்கமையச் சீர்தூக்கப்பட்டு நிராகரிக்கப்படக்கூடும். பின்வரும் விடயங்களுக்குப் பரீட்சார்த்தியின் கவனம் கோரப்படுகிறது :—

(அ) ஆசிரியர் ஒருவர், திணைக்களத்தில் பதிவு செயயப்பட்டுள்ளபடி தனது பெயரைக் கொடுக்க வேண்டும் ;

(ஆ) ஆசிரியர் ஒவ்வொருவரும் தான் ஓர் ஆசிரியரா, மாணவ ஆசிரியரா எனக் குறிப்பிடுவதுடன் நியமனத் திகதியையும் பதிவிலக்கத்தையும் கொடுக்க வேண்டும் ;

(இ) விண்ணப்பதாரி ஆசிரியராயின், அவர் கடமைபுரியும் பாடசாலைத் தலைவர் மூலம் விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும் ;

(ஈ) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவம், பின்வரும் சொற்கள் தெளிவாக இடதுபக்க மேல் மூலையில் எழுதப்பெற்ற காகித உறையில் வைக்கப்பட்டு அனுப்பப்பட வேண்டும் ; "பொதுப் பயிற்சி நெறி (தமிழ்)" ;

(உ) விண்ணப்பம், 1973.08.15 அன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக கீழ்க்காணும் விலாசத்துக்குப் பதிவுஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும் :—

வித்தியாதிபதி,
ஆசிரியர் கல்வி,
கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2.

(iii) விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

(iv) சாதனங்கள் ஒன்றும் விண்ணப்பத்துடன் இணைத்தனுப்பப்படலாகாது.

பி. உடகம,
மகா வித்தியாதிபதி.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2.
1973 ம் ௵ ஜுலை ௴ 5 ந் வ.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**பொதுப் பயிற்சி நெறிகளில் ஆசிரியர்களாகப் பயிற்சி அளித்தற்கு நடைபெறும் தெரிவுக்கான விண்ணப்பம்—1974 ஆம் ஆண்டு**

1. பால் (எதிரேயுள்ள கூடுகளில் உரிய கூட்டில் √ என அடையாளமிடுக) : ஆண் ☐ பெண் ☐

2. (i) முழுப்பெயர் (சொந்தப்பெயர் முதல்) : ....................
(ii) முதலெழுத்துக்களுடன் சொந்தப் பெயர் : ..................

3. நியமனத் திகதி :

4. ஆசிரியராகப் பதிவிலக்கம் : ........

5. விலாசம் : ........................... பாடசாலை :
விலாசம் :
வகை :—அரசினர்/தனிப்பட்ட கட்டணம் அறவிடும்/தனிப்பட்ட கட்டணம் அறவிடாத/அங்கீகரிக்கப் பட்ட தனிப்பட்ட/தோட்ட
மாவட்டம் : தேர்தல் தொகுதி :

6. நிரந்தர விலாசம் : மாவட்டம் : தேர்தல் தொகுதி :

7. பிறப்பு : பிறந்த திகதி :
பிறந்த மாவட்டம் :

8. வயது :
(74.1.1. அன்றுள்ளபடி)
....வரு....மா....நாள்

9. உமது வயது அமையும் கூட்டில் √ என அடையாளமிடுக :
18–23 ☐ 23–28 ☐ 28–32 ☐ 32–40 ☐ 40–45 ☐

| 10. சித்தி எய்திய உயர் பரீட்சை விபரங்கள | பரீட்சைப் பெயர் | தராதரப்பத்திர இலக்கம் | திகதி சித்தி எய்திய பாடங்கள் |
|---|---|---|---|
| | இடைமானி<br>கலைப் பொதுத் தகைமை<br>விஞ்ஞான பொதுத் தகைமை<br>ஆசிரியர் தராதரப் பத்திரம் (1 ஆம்/2 ஆம்/3 ஆம் வகுப்பு)<br>க.பொ.த. (உயர்தர) | | |

| 11. க.பொ.த. பத்திரப் பரீட்சைப் பெறுபேறுகள் | பரீட்சை | வருடமும் மாதமும் | தராதரப் பத்திர இலக்கம் | | பாடங்களின் பெயர்களும் சித்தித் தரங்களும்* | விசேட சித்திகளின் எண்ணிக்கை | திறமைச் சித்திகளின் எண்ணிக்கை | சாதாரண சித்திகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | க.பொ.த (சா.தர) | | | சித்தித் தரம் | | | | |
| | க.பொ.த. (உயர்தர) | | | சித்தித் தரம் | | | | |

* சாதாரண சித்தியை " சி " எனவும், திறமைச் சித்தியை " தி " எனவும் விசேட சித்தியை " வி " எனவும் குறிப்பிடுக.

12. சேவை விபரங்கள் :—

| பாடசாலைப் பெயர் | விலாசம் | மாவட்டம் | நியமனத் திகதி | மாற்றத் திகதி |
|---|---|---|---|---|
| | | | | |

13. புறமுயற்சிகள் :
(அ) விளையாட்டுகள் :
(ஆ) சங்கங்கள் :
(இ) சமூக வேலை :

14. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இவ்விண்ணப்பப் படிவத்தில் கொடுபட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவையென இத்தால் அத்தாட்சிப்படுத்துவதுடன் வேண்டப்படு மிடத்து அவற்றை நிரூபித்தற்கான சான்றுகளைச் சமர்ப்பிப்பேன்.

....................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :...................

15. பாடசாலைத் தலைவர்/வட்டாரக் கல்வி உத்தியோகத்தர் அத்தாட்சிப்படுத்தல் :

மேற்குறித்த விண்ணப்பதாரி—

(i) எனது பாடசாலையில் ஓர் உதவி ஆசிரியராக/தலைமை ஆசிரியராக இருக்கிறார் ;

(ii) அவருடைய வேலை......................தொடக்கம்................வரை திருப்திகரமானது ;

(iii) தராதரப் பத்திரம் பெற்ற/தராதரப் பத்திரமற்ற ஆசிரியர் ;

(iv) எனது முன்னிலையில் இப்படிவத்தில் கையொப்பமிட்டுள்ளார், என்பனவற்றை இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

..........................................
பாடசாலைத்தலைவரின்/வட்டாரக் கல்வி உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி :.....................

பாடசாலைத் தலைவரின்/வட்டாரக் கல்வி உத்தியோகத்தரின் பெயரும் உத்தியோகப் பதவிப் பெயரும் :..............................

உத்தியோக விலாசம் :..........................................

**குறிப்பு.**—படிவத்தில் பொருத்தமற்றவற்றைக் கீறிவிடுக.

7–757— 20.07.73ந் திகதிய வர்த்தமானி இல. 69

---

இல. 1/23/4/17(ஜி)

**பொது எழுதுநர் சேவையின் II ஆம் வகுப்பின் " அ " பிரிவிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை— செத்தெம்பர் 1973**

29.9.1971 இன் 14,977/9 ஆம் இலக்கத்தையுடைய அரசாங்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பொது எழுதுநர் சேவையின் பிரமாணக் குறிப்பின் 15 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, பொது எழுதுநர் சேவையின் II ஆம் வகுப்பின் " அ " பிரிவில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை அரசாங்க சேவை அதிகாரசபையின் அங்கீகாரத்தின்படி, 1973, செத்தெம்பர் 29 ஆந் திகதியில் பரீட்சை ஆணையாளரால் கொழும்பில் நடாத்தப்படு மென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. **பரீட்சைத் திட்டம்**:—பின்வரும் பாடங்களைப் பரீட்சை கொண்டதாக இருக்கும்:—

(i) அலுவலக முறைமையும் நடைமுறையும் ;

(ii) அரசாங்க அலுவலகங்களில் நடைமுறையிலிருக்கும் கணக்குமுறை.

**பாடத்திட்டம்.**—பரீட்சார்த்திகள் பின்வருவன பற்றிய அறிவைப் பெற்றிருக்க எதிர்பார்க்கப்படுவர் :—

1. அலுவலக முறைமையும் நடைமுறையும் (இரண்டு மணித்தியால வினாத்தாள்)—

(i) அலுவலக முறைமையின் முக்கியத்துவம் ;

(ii) அலுவலக முறைமைக் கொள்கை ;

(iii) கோப்பு முறையின் அடிப்படைகள் ;

(iv) அட்டவணைப்படுத்தல் ;

(v) களஞ்சியத்திடுகை முறையும் பதிவுகள் பேணலும் ;

(vi) கோப்பிடும் சாதனங்கள் ;

(vii) பதிவுகளின் நிறுத்திவைத்தல், முடிபு செய்தல் முறைமை ;

(viii) வெளி, உள் அஞ்சல் கையாளப்படுதல் ;

(ix) கடிதப் போக்குவரத்து : பதிந்து வைத்தல், நடவடிக்கை எடுத்தல், முகாமை, பின்பற்றல் முறைமை ;

(x) வேலைக் கட்டுப்பாட்டு அட்டவணை (உதாரணமாகத் திரட்டுகள் குறிப்பிட்ட தேதிகளில நடவடிக்கை எடுக்கப்படவுள்ள விஷயங்கள் ஆதியன) ;

(xi) நிகழ்ச்சிக் குறிப்பெழுதுதல் ;

(xii) அறிக்கை எழுதல் ;

(xiii) விஷய எழுதுநர், கிளைத் தலைவர்கள், பதிவு வைப்பாளர்களின் கடமைகள் ;

(xiv) கடமை நிரல்கள் ;

(xv) நடைமுறைப் பதிவுகள் ;

(xvi) படிவங்களின் மீளமைப்பு ;

(xvii) நடைமுறைகளை எளிதாக்கல் ;

(xviii) கடிதத் தொடர்புகளை நியமமாக்கல் ;

(xix) பொது மக்களுடன் தொடர்பு

(2) அரசாங்க அலுவலகங்களில் நடைமுறையிலிருக்கும் கணக்குமுறை (மூன்று மணித்தியால வினாத்தாள்)—

(i) திரட்டு நிதி, பகிர் சட்டமும் விசேட சட்டமும் (அதிகாரம் 1, பிரிவு1), வருடாந்த மதிப்பீடுகள், (அதிகாரம் 1, பிரிவு 2, 3, 4) அடையாள ஏற்பாடுகள் (நிதிப் பிரமாணங்கள் 21, 230) ; ஆணைச்சீட்டுகள் (நிதிப் பிரமாணம் 90) வருடாந்த மதிப்பீடுகளின் மாறல (அதிகாரம் 1, பிரிவு 5) ;

(ii) முற்பணக் கணக்கு வகைகள், எல்லைகளும் மாறல்களும், முற்பணக் கணக்கு தொடர்பான ஆக்கப் பொருட் செலவு (நிதிப் பிரமாணங்கள் 22, 41, 500 விருந்து 515) ;

(iii) தவணையிட்ட மொத்தக் கடன்கள் உட்பட்ட, மொத்தக் கடன்கள் (நிதிப்பிரமாணங்கள் 94, 447) ;

(iv) வருவாய் மதிப்பீடுகள் ; முத்திரையில் சேகரிக்கப்பட்ட வருவாய் (நிதிப் பிரமாணங்கள் 84, 494, நிதிப்பிரமாணங்கள் 865–871) வருவாயிலிருந்து மீளளிப்பு (நிதிப் பிரமாணங்கள் 118, 205, 229) ;

(v) கணக்கீட்டு உத்தியோகத்தர்கள், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள், வருவாய் கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் (நிதிப் பிரமாணங்கள் 124, 125, 127, 128) ; கடமைகளைக் கையளித்தல் (நிதிப்பிரமாணங்கள் 135–144, 157) ; உள்ளகக் கணக்காய்வு (நிதிப்பிரமாணங்கள் 133) செலவுக்கான பகிர்வு (நிதிப் பிரமாணங்கள் 146, 208, 449) பகிர் கணக்கும் வருவாய் கணக்கும் (நிதிப்பிரமாணங்கள் 150, 151) ;

(vi) நட்டங்களும் விட்டனவும் (அதிகாரம் II, பிரிவு 3, நிதிப் பிரமாணம் 156) ;

(vii) பற்று, கட்டுக்காப்பு, பொது நிதி வழங்கல் தொடர்பான நடைமுறை (அதிகாரம் IV), மறுத்த காசோலைகள் (நிதிப்பிரமாணங்கள் 189, 480) ;

(viii) கொடுப்பனவுகள்—நடைமுறை (அதிகாரம் V, பிரிவு 6 தவிர்ந்த);

(ix) அரசாங்க காசின் பாதுகாப்பு முதலியன, கணித்தற் குழுக்கள், அடிக்கட்டைப் புத்தகங்கள், கட்டு நிதி, வங்கிக் கணக்குகள் (அதிகாரம் VI );

(x) அரசாங்கத் திணைக்களங்களில் பிரதான ஏடுகளும், பதிவு இடாப்புகளும் (அதிகாரம் VII இன் பிரிவு 2) ;

(xi) கச்சேரிகளிலும் (அதிகாரம் IX, பிரிவு 1), நீதிமன்றங்களிலும் பிசுக்கால் அலுவலகங்களிலும் (அதிகாரம் IX, பிரிவு 5, 6) பொதுக் கணக்கீட்டு நடைமுறை ;

(xii) வைப்புக் கணக்குகள் (நிதிப்பிரமாணங்கள் 206, 414 அதிகாரம் IX இன் பிரிவு 3) ;

(xiii) வேலையும் சேவையும்—கட்டுமானத் திணைக்களங்கள் (நிதிப் பிரமாணங்கள் 54, அதிகாரம் IX இன் பிரிவு 5) ;

(xiv) வழங்கல்களைப் பெறுதல், கட்டுக்காப்பு, சரிபார்த்தல் பற்றிய நடைமுறையும், உபயோகிக்கத்தகாத களஞ்சியப் பொருள்களும் (அதிகாரம் XI, பிரிவு 2, 3, 4) ;

(xv) ஒப்பந்தங்கள் (அதிகாரம் XI இன் பிரிவு 1) ; கேள்வி நடைமுறையிலிருந்து வழிமாறல் (அதிகாரம் XI இன் பிரிவு 6).

3. எழுதுநர் சேவையில் சேர்வதற்கு நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய மொழி அல்லது சிங்கள மொழி மூலமாகவே பரீட்சார்த்திகள் இரு வினாத்தாள்களுக்கும் பதிலெழுத வேண்டும். போட்டிப் பரீட்சைகள் இன்றி உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் தாம் கல்விகற்ற மொழி மூலம் அல்லது சிங்கள மொழிமூலம் இரு வினாத்தாள்களுக்கும் பதிலெழுத வேண்டும்.

4. பரீட்சார்த்திகள், தமது விருப்பத்தின்படி வெவ்வேறான தடவைகளில் தனித்தனியாகவும் இப்பாடங்களுக்குத் தோற்றலாம். ஒவ்வொரு பாடத்திலும் சித்திக்காகக் குறைந்தது 40 சத விகிதமான புள்ளிகளைப் பெற வேண்டும்.

5. (i) இவ்வறிவித்தலின் இறுதியில் மாதிரி விண்ணப்பப் படிவம் வெளியிடப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகள் தங்கள் விண்ணப்பப் படிவங்களை ஒரு முழுத்தாளின் அரைத்தாளில் (வேறு அளவினதான தாளில் அல்ல) குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கிணங்கத் தாமே தயாரித்துக் கொள்ளவேண்டும். இதன் பொருட்டு ஒரு தாள் மட்டும் உபயோகிக்கப்படல் வேண்டும். தட்டச்சில் படிவம் தயாரிக்கப்படினும், பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்தில சரியாகவும், தெளிவாகவும் விண்ணப்பங்கள் நிரப்பப்படல் வேண்டும்.

(ii) அரசகரும மொழிக் கொள்கைக்கிணங்க "புதிய முறைப்படி சேர்ந்த" வராகக் கருதப்படும் உத்தியோகத்தர்கள், அரசகரும மொழியில் தமது விண்ணப்பங்களைத் தயாரித்து, அம்மொழியிலேயே அவற்றை நிரப்புதல் வேண்டும். எனினும், "பழைய முறைப்படி சேர்ந்த" உத்தியோகத்தர்கள் தமது விருப்பத்தின்படி அரசகரும மொழியில் அல்லது ஆங்கிலத்தில் விண்ணப்பங்களைத் தயாரித்து நிரப்புதல் வேண்டும்.

(iii) முதல் முறையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் ஏதேனும் பரீட்சைக் கட்டணம் கொடுக்கத் தேவையில்லை. ஆயினும், பின்வருகிற அமர்வுகளின் விடயத்தில், ஒரே அமர்வில முழுப்பரீட்சைக்கும் தோற்றுவதானால் 15 ரூபா பெறுமதியான முத்திரைகளை அல்லது ஒரு பாடத்துக்கு மாத்திரம் தோற்றுவதானால் 7 ரூபா 50 சதம் பெறுமதியான முத்திரைகளை அவர்கள் விண்ணப்பம் கொண்டிருத்தல் வேண்டும். அம்முத்திரைகள் பரீட்சார்த்தியின் கையொப்பத்தினாலும் திகதியினாலும் முறையாகப் பெறுமதி நீக்கஞ் செய்யப்படுதல் வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் மீளளிப்பு எதுவும் செய்யப்படமாட்டாது. இப்பரீட்சைக்காகக் கட்டப்பட்ட கட்டணங்கள் வேறேதேனும் பரீட்சைக்கு மாற்றப்படமாட்டாது.

(iv) விண்ணப்பங்கள் கொழும்பு 2, மலே வீதி, பரீட்சை ஆணையாளரை, 1973, ஓகத்து 25 ஆந் திகதிக்குப் பிந்தாமல் அடையக்கூடியதாகத் திணைக்களத் தலைவர்கள் மூலமாகப் பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தைப் பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். முடிவு தேதிக்குப் பின் பெறப்படும் எந்த விண்ணப்பமும் நிராகரிக்கப்படும்.

6. பரீட்சை ஆணையாளர் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரீட்சார்த்திகள் யாவருக்கும் நேரசூசிகளுடன் அனுமதிப் படிவங்கள் வழங்குவார். பரீட்சைத் தேதிக்குக் குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்னரேனும் ஒரு பரீட்சார்த்தி தமது அனுமதிப் படிவத்தைப் பெறாவிடின் அவர் கொழும்பு 2, தபால் பெட்டி இல. 1503, மலே வீதி, பரீட்சை ஆணையாளருடன் காலதாமதமின்றித் தொடர்பு கொள்ளுதல் வேண்டும். (தந்தி முகவரி: "எக்சாம்ஸ்," கொழும்பு) அவ்வாறு தொடர்பு கொள்ளும்போது, அனுமதிப்படிவம் தமக்குக் கிடைக்கவில்லையென்று தெரிவிப்பதுடன், பின்வரும் தகவல்களையும் அளித்தல் வேண்டும்—

(1) பரீட்சையின் பெயர் ;

(2) முழுப் பெயர் ;

(3) முழு அஞ்சல் விலாசம் ;

(4) அஞ்சல் அலுவலகமும் பவிதிலக்கமும் விண்ணப்பம் அனுப்பிய தேதியும்.

7. பரீட்சை ஆணையாளரால் விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுககுப் பரீட்சைக்குச் சமுகமளிப்பதற்குக் கடமையிலீடுபட்டுள்ளவாறான லீவு வழங்குமாறு திணைக்களத் தலைவர்கள் வேண்டப்படுகிறார்கள்.

8. பரீட்சார்த்திகள் தாங்கள் எடுக்கும் ஒவ்வொரு பாடத்துக்கும் பரீட்சை மண்டபத்தில் மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் தங்கள் அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர். இதற்காகப் பின்வரும் சாதனங்களில் ஏதாவதொன்று ஏற்றுக்கொள்ளப்படும் :—

(அ) அஞ்சல் தலைமை அதிபதி வழங்கிய அடையாளச் சீட்டு ;

(ஆ) இப்பரீட்சைத் தேதிக்குமுன் மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாத காலத்தில் வழங்கப்பட்டதும், வலிவுள்ளதுமான ஒரு கடவுச் சீட்டு (பாஸ்போட்) ;

(இ) இப்பரீட்சைத் தேதிக்கு முன் மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாத காலத்தில் ஓர் அரசாங்கத் திணைக்களத்தின் அதிகாரத்தோடு வழங்கப்பட்ட, வைத்திருப்பவரின் புகைப் படத்தைத் தன்னகத்துக் கொண்டதுமான ஏதாவதொரு சான்றிதழ் அல்லது உத்தரவுப் பத்திரம் அல்லது பிற சாதனம் ;

(ஈ) கடவுச்சீட்டின் அளவுள்ள புகைப்படம் (அதன் பின்பக்கத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம் இடப்பட்டு, புகைப்படமும் கையொப்பமும் பரீட்சார்த்தியினுடையதுதான் என்று திணைக்களத் தலைவரால் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட ஓர் உத்தியோகத்தரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். மேற்பார்வையாளரால் இப்புகைப்படம் வைத்துக்கொள்ளப்படும்.

9. பரீட்சார்த்திகள் பரீட்சை ஆணையாளரால் பரீட்சை நடத்துவதற்காகக் குறிப்பிடப்பட்ட விதிகளுக்கு அமைய ஒழுகக் கடமைப்பட்டவர்கள். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்திகள் பரீட்சை ஆணையாளர் விதிக்கும் எவ்விதத் தண்டனைக்கும் ஆளாகக் கூடியவராயிருப்பர். பரீட்சார்த்திகளுக்கான விதிகள் இவ்வறிவித்தலின் இறுதியில் வேறாக அச்சிடப்பட்டுள்ளது.

10. 6 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு நடவடிக்கை எடுக்கத் தவறி, பின்பு பரீட்சார்த்திகள் செய்து கொள்ளும் தொடர்புகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

பீ. எச். சிறிவர்த்தன,
அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி, உண்ணாட்டலுவல்கள் அமைச்சின் காரியதரிசியும் பதில் அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் நாயகமும்.

அரசாங்க நிருவாகத் திணைக்களம்,
கொழும்பு 7,
1973 ம் ஆண்டு யூலை மீ 9 ஆம் உ.

**பொது எழுதுநர் சேவையின் II ஆம் வகுப்பின் "அ" பிரிவிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை— செத்தெம்பர் 1973**

மாதிரி விண்ணப்பப் படிவம்

(**குறிப்பு.**—இப்படிவம் பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்தில் சரியாகவும், தெளிவாகவும் நிரப்பப்படல் வேண்டும்).

| சுட்டிலக்கம் : (அலுவலக உபயோகத்துக்காக மட்டும்) |
|---|

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் :————.

முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர்கள் :————.
(தெளிவான எழுத்தில்)

(ii) பால் :————.

2. அரசாங்க சேவையில் சேர்ந்தபின் உமது பெயரை மாற்றியுள்ளீரா? ஆயின், முந்திய பெயர் :————.

3. பிறந்த திகதி :————.

4. சேர்ந்த திகதி :—.

(i) பொது எழுதுநர் சேவையின் நிறைவேற்று எழுதுநர் வகுப்பு II ஆம் தரத்தில் :————.

(ii) பொது எழுதுநர் சேவையின் II ஆம் வகுப்பு, பிரிவு (அ) வில் :————.

5. அரசகரும மொழிக் கொள்கைக்கிணங்க, நீர் பழைய முறைப்படி சேர்ந்தவரா அல்லது புதிய முறைப்படு சேர்ந்தவரா :————.

6. திணைக்களத்தின் பெயர் :————.

7. அஞ்சல் விலாசம் :————.
(அலுவலக விலாசம் கொடுக்கப்பட வேண்டும்).

8. பின்வரும் பாடங்களில் ஏதாவதொன்றில் முன் நடந்த இப் பரீட்சையொன்றில் சித்தியடைந்துள்ளீரா? கணக்கியல் ; சிங்களம் (அ), (ஆ) ; சிங்களம் கீழ்த்தரம் (அ), (ஆ); தமிழ் (அ), (ஆ); தமிழ் கீழ்த்தரம் (அ), (ஆ) ; அலுவலக ஒழுங்கு முறையும் நடைமுறையும். எனின், பாடங்களைக் குறிப்பிட்டு, பரீட்சைத் தேதியையும் தருக :————.

9. 1965 டிசம்பர் 7 ஆம் திகதியையுடைய திறைசேரி சுற்றுநிருப இலக்கம் ஜி(98) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் சிங்களம்/தமிழ் பாடங்களுக்குத் தோற்ற விதிவிலக்களிக்கப்பிட்டிருப்பின், திறைசேரி அல்லது அரசாங்க நிருவாகக் கடித எண்ணைக் குறிப்பிடுக : ————.

10. இப்பொழுது நீர் எடுக்கும் பாடத்தை/பாடங்களைக் குறிப்பிடுக :—

(அ) :————.

(ஆ) :————.

11. பரீட்சை எடுக்கும் மொழி :————.

12. (i) இப்பரீட்சைக்கு முதன் முறையாகத் தோற்றுகிறீர் என்பதைக் குறிப்பிடுக :————.

(அ) இரு பாடங்களின் தொடர்பாக :————.

(ஆ) அலுவலக முறைமையும் நடைமுறையும் மாத்திரம் தொடர்பாக :————.

(இ) கணக்குமுறை மாத்திரம் தொடர்பாக :————.

(ii) முதன் முறையாக இப்பரீட்சைக்கு நீர் தோற்றுதவிடத்து, ரூபா 15/ ரூபா 7.50 பெறுமதியான முத்திரைகளை ஒட்டியுள்ளீரா?

13. முத்திரைக்கான கூடு.

| ரூபா 15/ரூபா 7.50 பொருந்துமாப்போல். |
|---|

குறிப்பு.—பரீட்சார்த்தி ரூபா 15 / ரூபா 7.50 பெறுமதியான முத்திரைகளைப் பொருந்துமாப்போல் ஒட்டுதல் வேண்டும்; தனது கையொப்பத்தையும் திகதியையுமிட்டு அவற்றைப் பெறுமதி நீக்கஞ் செய்தல் வேண்டும்.
முத்திரைகள் ஒன்றன்மேல் ஒன்றாக ஒட்டப்படுதலாகாது.

மேற்கூறப்பட்ட விவரங்கள் சரியானவை என்றும், மேலே 11 ஆம் பந்தியில் குறிக்கப்பட்ட மொழிமூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற உரித்துடையேன் என்றும் யான் உறுதிப்படுத்துகிறேன். இதனுள் ஒட்டப்பட்டுள்ள ரூபா ...... பெறுமதியான முத்திரைகள் உண்மையானவையும் முன்பு உபயோகிக்கப்படாதவையும் என நான் சான்றுபடுத்துகிறேன். இப்பரீட்சைக்கு விதிக்கப்பட்ட விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க நான் உடன்படுகிறேன்.

————————,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.
(கீழ்க்குறிப்பைப் பார்க்க).

திகதி :————.

குறிப்பு.—பரீட்சார்த்திகள் தமது திணைக்களத் தலைவர் அல்லது அத்தகைய திணைக்களத் தலைவர் சார்பாக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் அல்லது தனது பகுதித் தலைவர் முன்னிலையில் கைச்சாத்திட வேண்டும்.

### கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்

நான், திரு./திருமதி/செல்வி .............................. எனது அலுவலகத்தில் ஓர் உத்தியோகத்தர் எனவும், தமது கையொப்பத்தை 1972 ஆம் ஆண்டு.................. மாதம் ...... திகதி என் முன்னிலையில் இட்டாரெனவும், இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம் :————.

பெயர் :————.

பதவிப் பெயர் :————.

விலாசம் :————.

### திணைக்களத் தலைவரின் சான்றிதழ்

(i) மேலே கொடுக்கப்பட்ட விவரங்கள் செவ்வைபார்க்கப்பட்டுச் சரி காணப்பட்டவை என்றும்,

(ii) உத்தியோகத்தர் முதன்முறையாக* இப்பரீட்சைக்குத் தோற்றுகிறார்/இவ்விண்ணப்பம் ரூபா 15 / ரூபா 7.50 பெறுமதியான முத்திரைகளைக் கொண்டுள்ளது என்றும்,

(iii) பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்றத் தகவுடையவர் என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

————————,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பதவிப் பெயர் :————.

திகதி :————.

*பொருத்தமற்றவற்றை நீக்குக.

### இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

பரீட்சார்த்திகள் கவனிக்கவேண்டிய விதிகள்

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்து கொள்ளவேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர் :—

(i) முழுப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர். அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்.

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம் வரை பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்துவைக்கப் படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்து வைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தைபற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்து விடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ, பரீட்சைக்குப் பின்னரோ, தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால், அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும் அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தேர்ந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாகாரியின் தீர்மானம், அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

### விதிகள்

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ளவேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் பொழுதும் வெளியேறும்பொழுதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுது அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்யவேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றப் பரீட்சார்த்திகளுடனே வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சைக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுத்துந் தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக் கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடையெழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரைமணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர்தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேகவும் அனுமதிக்கப்படுவர். செய்கைமுறை அல்லது வாய்மொழிப் பரீட்சையைப் பொறுத்த வரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியனவற்றை ஒழுங்காகக் கீறிவிட வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பல விடயங்களில் விடை எழுதியிருந்தால் தேவைப்படாத

விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிருந்தால் சித்திரத்தில் அலங்காரரூபச் சித்திரமும் கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அழகிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறும் ஒன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப் பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக்கூடாது. தேவைக்கு வேண்டியமாதிரி வர்ணப் பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோ விட கைப்பை, அழகுசெய் செப்பு, பார்சல் முதலியவற்றை, கோவை அட்டை, கடதாசிமட்டை, வெற்றுக் கடதாசி கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்குள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்பத்துள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால், பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்ல விடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும் மீண்டு வரும்பொழுதும் சோதிக்கப்படுவர்.

14. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறெவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைககப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல் பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவிசெய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகளுக்கு :**

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி மேல்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் :—

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தபட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாகப் பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதியைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்கு முன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும் ;

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும்பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டுவருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப் பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செயதல்வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத் தாள் கணனரேகைத் தாள், பேரேட்டுத் தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால், அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்கவேண்டும். உமக்கென கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை மேசைமேல் விட்டுவிட வேண்டும். சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப்பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர் வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டு வருதல் வேண்டும் ;

(v) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதும் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்படவேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக் கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம் ;

(vi) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில், வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலது பக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(vii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறையான அமைப்பு முறையில் தருக. வரைப் படங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும், பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைப் படத்தை அல்லது கோட்டுரூபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்திலும் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும் ;

(viii) ஒவ்வொரு படத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல்மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(ix) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள், தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(x) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற்போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகனிடமோ பணியாளரிடமோ விடைத் தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xi) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெற வேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக் காட்டவேண்டும்.

போகொட பிரேமரத்ன,
பரீட்சை ஆணையாளர்.

பரீட்சைத் திணைக்களம்,
மலே வீதி, கொழும்பு 2.

7–590—20.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 69

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை—1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| யூலை | 6.7.73 | வெள்ளி | 27.6.73 | புதன் | ந.ப 12.00 |
| | 13 7.73 | வெள்ளி | 4.7.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 20 7.73 | வெள்ளி | 11.7.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 27.7.73 | வெள்ளி | 18.7.73 | புதன் | ந.ப. 12.00 |
| ஓகத்து | 3.8.73 | வெள்ளி | 25.7.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 10.8.73 | வெள்ளி | 1.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 17.8.73 | வெள்ளி | 8.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 24.8.73 | வெள்ளி | 15.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 31.8.73 | வெள்ளி | 22.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| செத்தெம்பர் | 7.9.73 | வெள்ளி | 29.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 14.9.73 | வெள்ளி | 5.9.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 21.9.73 | வெள்ளி | 11.9.73 | செவ்வாய் | ந.ப. 12.00 |
| | 28.9.73 | வெள்ளி | 19.9.73 | புதன் | ந.ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
**கொழும்பு,**
**1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந உ.**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.